Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 99 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(08.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 13, 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

## கமெண்ட் கந்தர்...



"அவளைத் தொடுவானேன் கவலைப்படுவானேன்" எண்ட தமிழ்ப் பழமொழி தனுஷ்க தம்பிக்குத் தெரிஞ்சிருந்தா உந்தப் பிரச்சினை நடந்திருக்காது என்னங்கோ..!



## உஷ்

ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கப்போவதாக ராஜித சேனாரத்ன எம்.பி. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறிய கையோடு ராஜித எம்.பி. உட்பட்ட சிலர் அரசுக்கு ஆதரவளிக்கப் போவதாக சொல்லப்படுகிறது.

சுகாதார அமைச்சு வேண்டாம், நிதியமைச்சைத் தாருங்கள் என்று ரணிலிடம் கேட்கிறாராம் ராஜித என்றும் மற்றுமொரு தகவல் கூறுகிறது.

# தனுஷ்கவுக்கு புனர்வாழ்வு!



### பிணை கோரிக்கை மீண்டும் நிராகரிப்பு

### விசாரணை ஜனவரி 12வரை ஒத்திவைப்பு

நா.தினுஷா

யுவதியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அவுஸ்திரேலிய பொலிஸாரால் கைதான இலங்கை கிரிக்கெட் அணி வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு பிணை வழங்க சிட்னி நீதிமன்றம் நேற்று இரண்டாம் முறையும் மறுத்துள்ளது. அதற்கமைய தனுஷ்க குணதிலக்கவை ஐந்து நாட்களுக்கு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# கந்தகாட்டில் களேபரம்!

### 505 பேர் மடக்கிப்பிடிப்பு | 30 பேர் மாயம்

### பொலிஸார் உட்பட 10 பேர் காயம்

கனகராசா சரவணன்

வெலிக்கந்தை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இரவு (06) ஏற்பட்ட மோதலையடுத்து, குறித்த நிலையத்திலிருந்த 540 கைதிகள் தப்பியோடியுள்ளதுடன், பொலிஸார், இராணுவத்தினர் உட்பட 10 பேர் படுகாயமடைந்த நிலையில், வெலிக்கந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்... 02 பக்கம்






## தனுஷ்கவுக்கு போட்டித் தடை

அவுஸ்திரேலியாவில் பாலியல் பலாத்கார வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவுக்கு உள்நாட்டு மற்றும்... 02 பக்கம்

## முட்டைக்குத் தட்டுப்பாடு



முட்டைக் கையிருப்பில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அடுத்த வருடம் நாட்டில் முட்டைத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமுள்ளதாக அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்... 02 பக்கம்

## இன்று முதல் 11வரை நாடாளுமன்ற விசேட அமர்வு

நா.தினுஷா

விசேட நாடாளுமன்ற அமர்வுகள் இன்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. அதற்கமைய, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பான அவை ஒத்திவைப்புக்கான விவாதம் இன்று இடம்பெறவுள்ளது. 02 பக்கம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக்கை எகிப்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் சந்தித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாய அபிவிருத்தி நிலையங்களில் கிருமிநாசினிகளை விநியோகிக்க ஏற்பாடு

நெற்செய்கை மற்றும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள விவசாய அபிவிருத்தி நிலையங்கள் மூலம் விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாயிகளின் பிரதிநிதிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகளை விநியோகிக்கும் அனைத்து தனியார் நிறுவனங்களுடனும் நடத்திய கலந்துரையாடலின்போதே இந்த வேலைத்திட்டம் தொடர்பில் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது சந்தையில் பூச்சிக்கொல்லிகள் மற்றும்... 02 பக்கம்

## 306 இலங்கை அகதிகளை ஏற்றிச்சென்ற கப்பல் நடுக்கடலில் மூழ்கும் அபாயம்!

02 பக்கம்

## மு.கா. பேராளர் மாநாடு புத்தளத்தில்; ஹரிஸ், தவம் உட்பட்டோர் இல்லை!



திகாமடுல்ல நிருபர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு நேற்று புத்தளத்தில் நடைபெற்றது. கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்ட பைஷல் ஹாசிம், எம்.எஸ்.தௌபீக் ஆகிய நாடாளுமன்ற... 02 பக்கம்



## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு 'ஜனநாயகப் பொன்' விருது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு 'ஜனநாயகப் பொன் விருது' வழங்கப்பட்டுள்ளது. இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ் நிறுவனத்தால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகரை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ்... 02 பக்கம்

## தலைமன்னாரில் கைதான இந்திய மீனவர்கள் 14 பேருக்கு 17ஆம் திகதிவரை விளக்கமறியல்

03 பக்கம்

## உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களைக் குறைப்பதா?



### தயாசிறி ஜயசேகர ஆவேசம்

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது அவ்வளவு பெரிய செயற்பாடு அல்ல. இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கைகள் இருக்கின்றன. அந்த அறிக்கைகளை ஆய்வு செய்தாலே எல்லை நிர்ணய பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்... 02 பக்கம்

## உடவளவ சரணாலயத்தில் யானை தாக்கி பாதுகாப்பு அதிகாரி மரணம்

02 பக்கம்

## 300 கிலோ ஹெரோயினுடன் ஹம்பாந்தோட்டையில் 10 பேர் கைது



ஹம்பாந்தோட்டை கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் 300 கிலோ கிராம்.... 02 பக்கம்

## போதைக்கு அடிமையான 183 பேர் யாழில் அடையாளம்

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் 183 பேர் ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

## பாடசாலை மாணவர்கள் மீது தாக்குதல்

### பாதுகாப்பு அதிகாரசபையால் விசாரணைகள் ஆரம்பம்

### சம்பவம் குறித்து ஆராய கல்வி அமைச்சினால் விசேட குழு

நா.தினுஷா

பாடசாலை மாணவர்கள் wமீது தாக்குதல் மேற்கொண்டு அவர்களை சித்திரவதைக்குட்படுத்திய சம்பவமொன்று பண்டாரகம, மில்லனிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த இரண்டாம் திகதி சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய... 02 பக்கம்

## மாட்டைத் திருடி கலரடித்த திருடன்

### திருமலையில் கைது



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - கம்பகொட்ட பகுதியில் மாட்டைத் திருடி நிறம் மாற்றி பராமரித்து வந்த நபரொருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

# நிதியமைச்சின் கீழுள்ள திணைக்களங்களில் ஊழியர் பற்றாக்குறை

## டிசம்பரில் மேலும் அதிகரிக்குமென நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு

சுங்கம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் கலால் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் பெரும் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் டிசம்பர் மாதமாகும்போது ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் மேலும் அதிகரிக்குமெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் தற்போதுள்ள நிலைமையில் புதிய ஊழியர்களை இணைத்துக்கொள்ள முடியாதென்பதால் அரச சேவையிலுள்ள திறமைவாய்ந்த பட்டதாரிகளை இந்த நிறுவனங்களுக்கு இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரச வருமானம் ஈட்டும் நிறுவனங்களான சுங்கம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் கலால் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் தற்போது பாரிய ஆளணி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சுங்கப் பிரிவில் மாத்திரம் 773 ஊழியர்களுக்கான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தேசிய இறைவரித் திணைக்களத்தில் 434 ஊழியர்களுக்கும், கலால் திணைக்களத்தில் 332 ஊழியர்களுக்குமான வெற்றிடம் நிலவுகிறது.

ஓய்வூதிய வயதெல்லை 65 வயதிலிருந்து 60 ஆகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த வருட இறுதியில் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியாகும்போது பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்கள் ஓய்வுபெற்றுச் செல்லவும் இருக்கிறார்கள். இருந்தபோதும் நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலை மற்றும் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய ஊழியர்களை சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான வாயப்புகள் நிச்சயமாக இல்லை.

இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் வினைத்திறனுடன் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதால் இறைவரித் திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களைப் பூர்த்திசெய்யவேண்டியது மிகவும் அவசியம் என்பதாலும் கடமைகளில் ஈடுபடும் திறமைவாய்ந்த பட்டதாரிகளுக்கு இதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதற்கமைய, இந்த நிறுவனங்களின் சேவை சட்டத்தைப் பாதுகாக்கும் வகையிலும் அதுதொடர்பில் அதிக கவனம் செலுத்தியும் அமைச்சரவை அனுமதியுடன் தேவை ஏற்படுமெனில், அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்புகளை வழங்கி அவர்களை இந்த நிறுவனங்களுக்கு இணைத்துக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

## 306 இலங்கை...

ஆட்கடத்தல்காரர்களின் ஏமாற்று வலையில் சிக்கி, கனடாவுக்கு கப்பல் மூலம் பயணித்த 306 இலங்கைத் தமிழர்கள் ஆழ்கடலில் நிர்க்கதியாகியுள்ளனர்.

சட்டவிரோதமாக ஆட்கடத்தலில் ஈடுபடுபவர்களின் மோசடி வலையில் சிக்காதீர்கள் என தொடர்ந்து விழிப்புணர்வு பிரசாரங்கள் செய்யப்பட்டு வந்தாலும், அதையும் மீறிச் சென்று சிக்கிக்கொள்பவர்கள் இருக்கிறார்கள். அப்படித்தான், தற்போது 306 பேர் தென்சீனக் கடலுக்கு அண்மையில் சிக்கியுள்ளனர்.

இந்தியா, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் தங்கியிருந்த இலங்கையர்களையும் இணைத்து, 306 பேரை சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள் படகு மூலம் கனடாவிற்கு அனுப்பிவைத்தனர்.

கப்பலில் பயணிப்பவர்களின் உறவினர்களின் ஆதாரங்களின்படி இந்தக் கப்பல் சுமார் 2 தொடக்கம் 3 வாரங்களின் முன்னர் பிலிப்பைன்ஸிலிருந்து புறப்பட்டது. இதற்காக கப்பல் பயணிகள் பிலிப்பைன்ஸிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

எதிர்பார்த்ததை விடவும் மோசமான காலநிலை மற்றும் உணவு, எரிபொருள் தீர்ந்ததால் கப்பல் தற்போது பிலிப்பைன்ஸிற்கும், வியட்நாமிற்கும் இடைப்பட்ட பகுதியில் நடுக்கடலில் நிற்பதாக அதில் பயணம் செய்பவர்கள் உதவி கோரியுள்ளனர்.

எவ்வாறாயினும் இவர்களைக் காப்பாற்ற இலங்கைக் கடற்படை நேற்றிரவு உடனடி நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

## உள்ளூராட்சி...

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அதேபோன்று தேர்தலை காலந்தாழ்த்து வதற்கான அரசாங்கத்தின் சூழ்ச்சிவலையில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்றும் தேசிய எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவிடம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த தேசப்பிரிய மீது நாட்டு மக்களுக்கு பெரும் நம்பிக்கை இருக்கிறது. அதேபோன்று தேர்தலை காலந்தாழ்த்தும் செயற்பாடுகளை அவர் கடுமையாக எதிர்ப்பவர். அதன்காரணமாக இந்த செயற்பாட்டில் தொடர்புபட வேண்டாமென மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அதற்குக் காரணம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலந்தாழ்த்துவதற்காகவே இந்த நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு சூழ்ச்சிகரமான வேலைத்திட்டமொன்றை இந்த அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என்பதும் தெளிவாகப் புரிகிறது.

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை நான்காயிரம் அல்லது ஐயாயிரமாக குறைக்கவேண்டுமெனில் இதற்கு முன்னர் இணைத்துக்கொண்ட 25 சதவீதத்தை நீக்கினால் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடைந்துவிடும்.

உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பது அவ்வளவு பெரிய விடயமும் அல்ல. அவ்வாறில்லாவிட்டால் இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கைகளும் இருக்கின்றன. அந்த அறிக்கைகள் ஒன்று அல்லது ஒன்றரை வாரம் ஆய்வு செய்தால் எல்லை நிர்ணயம் தொடர்பான பிர்ச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

எல்லை நிர்ணயத்துக்காக எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை நான்கு அல்லது ஐந்து மாதங்கள் காலந்தாழ்த்தவேண்டிய அவசியமில்லை - என்றார்.

# திடீர் சுகயீனம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருமலை வளாக மாணவர்கள் 40 பேர் வைத்தியசாலையில்

*(ரவ்பீக் பாயிஸ், அப்துல்சலாம் யாசீம்)*

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் 40இற்கும் மேற்பட்டோர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தள வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுள் 30 பெண் பல்கலைக்கழக மாணவர்களும் 10இற்கும் அதிகமான ஆண் மாணவர்களும் அடங்குவதாகவும் இவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் காய்ச்சல், வயிற்றோட்டம், தலைச்சுற்று போன்ற நோய் அறிகுறிகள் இருப்பதாகக் கூறியே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

குறித்த மாணவர்களுக்கு உணவு ஒவ்வாமையாக இருக்கலாம் என வைத்தியர்கள் சந்தேகிப்பதாகவும் நாளைய தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்திலுள்ள மாணவர்களுக்கு பரீட்சை ஒன்றும் நடத்தப்படவிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தனுஷ்கவுக்கு...

2022, இருபதுக்கு இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றியிருந்த இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் தனுஷ்க குணதிலக்க நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் அவுஸ்திரேலிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சிட்னி கிழக்கு, ரோஸ் பேஹி பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய யுவதியினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த பாலியல் துஷ்பிரயோகம் தெடர்பான குற்றச்சாட்டு தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

டின்டர் செயலியினூடாக தான் தனுஷ்க குணதிலக்கவை முதன்முறையாக சந்தித்ததாகவும் அதன்பின்னர் ரோஸ் பேஹி நகரிலுள்ள தனது வீட்டில் வைத்து தன்னை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகவும் குறித்த யுவதி முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேகநபரான தனுஷ்க பல்வேறு சந்தர்ப்பங்களில் தன்னை தாக்கியதாக குறித்த யுவதி முறைப்பாடு செய்துள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் நியூவ் சவுத் வேல்ஸ் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர் தனுஷ்க குணதிலக்க சிட்னி சிட்டி பொலிஸாரினால் நான்கு பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நேற்று முன்தினம் பெரமடா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தபோதிலும் அதன்போது அவருக்கான பிணை நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய, சிட்னியிலுள்ள தடுப்பு மத்திய நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தனுஷ்க நேற்று இரண்டாவது முறையாகவும் சிட்னி சிட்டி பொலிஸாரினால் வீடியோ தொழில்நுட்பத்தினூடாக டவுனிங் சென்டர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தினூடாக நீதிமன்றத்தில் ஆஜரான தனுஷ்க சாம்பல் நிற ரீ சேட் அணிந்திருந்ததாகவும் அவர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரமே நீதிமன்றத்தின் முன்னால் பேசியிருந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய, டவ்நிங் சென்டர் பிரதேச நீதிமன்ற நீதிவான் ரொபட் வில்லியத்தின் முன்னால் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தனுஷ்க குணதிலக்கவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆனந்த அமரநாத் பிணை கோரியுள்ளார். ஆயினும், பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவுஸ்திரேலிய சட்டதிட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளதாலும் சந்தேகநபர் வெளிநாட்டைச் சேர்ந்தவர் என்பதால் பிணை மறுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதற்கமைய, தனுஷ்க ஐந்து நாட்கள் சீர்த்திருத்த மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், உயர் நீதிமன்றத்தில் பிணை கோர நடவடிக்கை எடுத்துள்ளதாக தனுஷ்கவின் சார்பில் ஆஜரான சட்டதரணிகள் குழாம் அறிவித்துள்ளது.

### மஹேல கருத்து

உலகக்கிண்ணப் போட்டிகளிலிருந்து வெளியேறியுள்ள இலங்கை கிரிக்கெட் அணி நேற்று நாட்டை வந்தடைந்தது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சி ஆலோசகர் மஹேல ஜயவர்தன,

இது கவலைக்குரிய விடயமாகும். இறுதிப்போட்டிகள் நிறைவடைந்து, இரவே இதனை அறிந்துகொண்டோம். அடுத்தநாள் அங்கிருந்து புறப்பட்டு வந்துவிட்டோம். எவ்வாறாயினும் வீரர்களின் தனிப்பட்ட நடவடிக்கைகள் குறித்து பொறுப்புக்கூற வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

விசாரணைகளின் முடிவுகளைப் பார்க்க வேண்டும். விசாரணை முடிவுகள் வரும்வரை உண்மையில் என்ன நடந்தது என்று எங்களால் கூறமுடியாது. போட்டிகளுக்காக வெளிநாடு சென்றால் அந்த நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்பட்டு மீண்டும் நாடு திரும்புவதே எங்களின் இலக்காக இருக்கும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் வீரர்களின் இதுபோன்ற செயற்பாடுகள் கவலைக்குரியதாகும்.

அணித் தலைவர் தசுன் சானக்க கருத்து தெரிவிக்கையில்,

இதுதொடர்பான விசாரணை இடம்பெற்று வருவதால் எங்களால் எதுவும் குறிப்பிட முடியாது. உண்மையில் என்ன நடந்துள்ளது என்பது எங்களுக்குத் தெரியாது. தனுஷ்கவுக்கு இவ்வாறு சேர்ந்தது கவலைக்குரிய விடயமாகும் - என்றார்.

இதேவேளை, வீரர் தனுஷ்க குணதிலக்க தொடர்பான விசாரணைகளுக்கான செலவீனங்களை அவர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, ஸ்ரீலங்கா கிரிக்கெட்டிற்கு இது தொடர்பில் அறிவித்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஸ்ரீலங்கா கிரிக்கெட், தனுஷ்க குணதிலக்கவிற்கு அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இது தனுஷ்க குணதிலக்கவின் தனிப்பட்ட பிரச்சினை என்பதனால், அதற்கான செலவீனங்களை விளையாட்டுத்துறை அமைச்சு ஏற்காதென விளையாட்டுத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, குறித்த வழக்கு விசாரணை ஜனவரி 12 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய தனுஷ்கவின் சட்டத்தரணிகள் குழாம் தயாராகி வருகின்றது.

## உடவளவ சரணாலயத்தில்...

*(ஏ.ஏ.எம்.பாயிஸ்)*

யானை தாக்கி வனப் பரிபாலனத் திணைக்கள அதிகாரி ஒருவர் மரணமடைந்துள்ளார். உடவளவை யானைகள் சரணாலயத்தில் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 22 வயதான வனப்பரிபாலனத் திணைக்கள அதிகாரி எம்பிலிபிட்டிய அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் மரணமடைந்துள்ளார். யானைகளுக்கு உணவு வழங்கச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாக உடவளவ சரணாலய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## முட்டைக்குத்...

சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

கால்நடை தீவன இறக்குமதி குறைவடைந்தமை மற்றும் கடந்த பருவத்தில் நிலவிய பொருளாதார சிரமங்களினால் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் முட்டை விலை மீண்டும் உயர்ந்து வருகிறது.

ஒரு முட்டை 50 ரூபாவுக்கு விற்க வேண்டிய நிலையில், தற்போது ஒருசில வர்த்தக நிலையங்களில் 53 ரூபாவுக்கு அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

இவ்வாறானதொரு நிலைமையை எதிர்கொண்டு நுகர்வோர் முட்டைகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கந்தக்காட்டில்...

தப்பி ஓடியவர்களில் 505 பேர் பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டு, 201 சீனபுர புனர்வாழ்வு நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தப்பியோடியவர்களில் 30 பேரை இராணுவத்தினர் பொலிஸார் இணைந்து தேடிவருவதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் காலி பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை மாதம்பை பகுதியைச் சேர்ந்த ஒருவர் மண்டையில் தாக்கியதையடுத்து யானை தாக்குவதாக காலி மாத்தறையைச் சேர்ந்த ஒருவர் குரல் கொடுத்ததையடுத்து, காலி மாத்தறையைச் சேர்ந்த குழுவினருக்கும் மாதம்பைப் பகுதியைச் சேர்ந்த குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வெலிக்கந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் சென்ற பொலிஸாரை தாக்கியதில் பொலிஸ் பொறுப்பதிகாரி, இரு பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் 6 கைதிகள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து 540இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியுள்ள நிலையில் இரு குழுக்களுக்கிடையிலான மோதலை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், தப்பியோடிய 201 கைதிகள் சரணடைந்ததுடன், ஏனைவர்களைத் தேடி இராணுவத்தினரும் பொலிஸாரும் மதுறு ஓயா காட்டுப்பகுதியில் தேடுதல்களை நடத்திவருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இவ்வாறு இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து வேலியை உடைத்து சுமார் 600இற்கும் மேற்பட்டோர் தப்பிச்சென்ற நிலையில், அவர்கள் சரணடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விரைந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை ஒன்றை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனுஷ்கவுக்கு போட்டித் தடை...

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தடையை விதிக்க இலங்கை கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் அவரது கிரிக்கெட் எதிர்காலம் தீர்மானிக்கப்படுமென அந்தச் சபையின் தலைவர் ஷம்மி த சில்வா தெரிவித்துள்ளார்.

## பாடசாலை மாணவர்கள்...

அந்த அதிகாரசபையின் விசேட விசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் கலாநிதி உதயகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவென கல்வி அமைச்சினால் தனியான குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் குறித்த பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பாடசாலையின் ஆசிரியர்கள் சிலரும் பாடசாலைக்குப் பொறுப்பான மில்லனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதிகாரிகள் சிலரினாலும் சிறுவர்கள் இவ்வாறு தாக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திருட்டுச் சம்பவமொன்று தொடர்பில் பாடசாலை ஆசிரியர்கள் சிலரினால் குறித்த சிறுவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். மில்லனிய பிரதேச பொலிஸாருக்கு அறிவித்ததன் பின்னர் சிறுவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட சிறுவர்களை கொடூரமாகத் தாக்கியுள்ளதுடன், அவர்களில் ஒரு சிறுவர் தங்கி சிகிச்சைப் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மூவரை விசாரணைக்காக இன்று (08) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் ஆஜராகுமாறு அதிகாரசபை அழைப்பு விடுத்துள்ளது.

## போதைக்கு...

சிறைச்சாலைகளிலிருந்து மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவர்களில் 155 பேர் ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையானர்வர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, நீதிமன்றங்களினால் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டவர்களில் 28 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## பெயர் மாற்றம்

நுவரெலியா மாவட்ட அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஸ்கெலியா புரவுன்சீக் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள புரவுன்சீக் தோட்ட மோட்டிங்ஹேம் பிரிவில் 976900405 V அடையாள அட்டை இலக்கம் கொண்ட தேவேந்திரன் தெய்வீக சுந்தரி ஆகிய நான் இன்றுமுதல் பௌத்த மதத்தைத் தழுவி எனது பெயரை தேவேந்திரன் மதுஷிகா ஆராச்சி என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

ஒப்பம்
தேவேந்திரன் மதுஷிகா ஆராச்சி

## மு.கா. பேராளர் மாநாடு ...

உறுப்பினர்கள் பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் கலந்துகொள்ளவில்லை. குறித்த மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

குறிப்பாக, கட்சியை விட்டு இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு பதவிகள் வழங்கப்படக்கூடாது என உயர்பீட உறுப்பினர்களுக்கு மத்தியில் கடும் நிலைப்பாடு இருந்தது. இருந்தபோதும் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஹாபீஸ் நஸீர், எச்.எம்.ஹரிஸ் தவிர்ந்த ஏனைய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதவிகள் வழங்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தார்.

இதன் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கட்சியின் தேசிய அமைப்பாளராகவும், கட்சியின் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் பிரதித் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிசாஹீர் மௌலானா பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டார். முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெப்பை பிரதி தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். கட்சியின் ஸ்தாபக செயலாளர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர் மீண்டும் பிரதித் தலைவராக தெரிவுசெய்யப்படார்.

தவிசாளராக முழக்கம் மஜீத், செயலாளராக சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், தலைவராக ரவூப் ஹக்கீம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எ.ஹரிஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் எல்.தவம், ஆரிப் சம்சுதீன் கலந்துகொள்ளவில்லை.

## இன்றுமுதல்...

சபை ஒத்திவைப்புக்கான யோசனை தேசிய மக்கள் சக்தியினால் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், மதிப்பு கூட்டப்பட்ட வரிச் சட்டத்தின் கீழ் ஆணை, கலால் சட்டத்தின் கீழ் இரண்டு அறிவிப்புகள், நாணயச் சட்டத்தின் கீழ் ஓர் உத்தரவு, அந்நியச் செலாவணி சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிமுறைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் மூன்று விதிமுறைகள் நாளை (9) சட்டம் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தின் அடுத்தகட்ட செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கான நாடாளுமன்றச் செயற்பாடுகள் தொடர்பாக செயற்குழுவின் விசேட கலந்துரையாடலொன்றும் இன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது. இதற்கமைய, அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வரவு செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் மாதம் 08ஆம் திகதி இறுதி விவாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கூட்டமைப்பின்...

நிறுவனத்தின் வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பாடநெறியை முடித்த 75 பேர் டிப்ளோ பட்டத்தைப் பெற்றனர்.

இந்த வருடாந்த டிப்ளோமா வழங்கும் விழாவில் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய பாடங்களுக்காக தன்னை அர்ப்பணித்த புகழ்பெற்ற அரசியல் பிரமுகர்களின் மதிப்பீடு நடத்தப்படுகின்றது.

அதற்கமைய, அதில் இரா.சம்பந்தன், வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் ஜனநாயகப் பொன் விருதைப் பெற்றார்.

நான்கு தசாப்த கால நாடாளுமன்ற வாழ்க்கையில் ஜனநாயகத்துக்காக சம்பந்தன் காட்டிய அர்ப்பணிப்பை மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரியவும் கலந்துகொண்டார்.

## விவசாய அபிவிருத்தி...

களைக்கொல்லிகள் மிக அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதால், அந்த நிலையை தடுக்கவும், விவசாயிகளுக்கு குறைந்த விலையில் அவற்றை விநியோகிப்பதற்கும் வசதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி நெல் மற்றும் இதர பயிர்களுக்குத் தேவையான பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியில் தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு கம்பனிகள் வழங்கும் தள்ளுபடிக்கேற்ப குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி விவசாயிகள் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை நாடளாவிய ரீதியில் உள்ள 566 விவசாய அபிவிருத்தி நிலையங்களில் கொள்வனவுசெய்ய முடியுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

## மாட்டைத் திருடி...

நொச்சிக்குளம் - ஜின்னாநகர் வயல் பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டிவைக்கப்பட்டிருந்த மாட்டை திருட்டுத்தனமாக கொண்டுசென்று மாட்டின் கொம்புகளை வெட்டி, வெள்ளை நிறத்தில் காணப்பட்ட மாட்டுக்கு நிறம் பூசி பராமரித்துவந்த நிலையில், மாட்டு உரிமையாளர் தன்னுடைய மாட்டைக் காணவில்லை என மொரவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக காணாமல் போன மாட்டைத் தேடி மாட்டு உரிமையாளர் அருகிலுள்ள கிராமத்திற்கு சென்றபோது நபரொருவர் மாடு வாங்கி வளர்த்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து குறித்த மாட்டை பார்வையிட்டபோது மாட்டின் இரு கொம்புகளும் வெட்டப்பட்ட நிலையில், மாட்டிற்கு நிறம் பூசப்பட்டுள்ள சம்பவம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மாட்டு உரிமையாளர் மொரவெவ பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தியபோது மாட்டை பராமரித்து வந்தவர் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது மாட்டைத் திருடி நிறம் பூசி வளர்த்து வந்தமை தெரியவந்துள்ளது.

அதேநேரம் குறித்த நபரை கைது செய்துள்ளதாகவும், இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மஹதிவுல்வெவ, கும்பகொட்ட பகுதியில் வசித்துவரும் ஏ.எம்.மதுசங்க பண்டார (23 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

## 300 கிலோ...

ஹெரோயினுடன் 10 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கை நேற்று (08) அதிகாலை முன்னெடுக்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்திய இரண்டு மீன்பிடிப் படகுகள் மற்றும் சிறிய ரக படகொன்றும் மீட்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, கடற்படை, பொலிஸார் இணைந்து இந்த சோதனையை முன்னெடுத்திருந்தனர்.

சந்தேகநபர்கள் ஹம்பாந்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# எகிப்தில் உலகத் தலைவர்களுடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்





காலநிலை மாற்றம் தொடர்பான கோப் 27 உலக மாநாட்டில் பங்கேற்பதற்காக எகிப்து சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாநாட்டின் போது உலக நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

எகிப்தின் ஷாம் அல்-ஷைக் நகரில் நேற்று முன்தினம் (6) ஆரம்பமாகி எதிர்வரும் 18ஆம் திகதிவரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொதுநலவாயத்தின் உயரதிகாரி பெட்ரிசியா, ஸ்கொட்லாந்து கே.சி, ருவாண்டாவின் ஜனாதிபதி பொல் கலாமா, பார்படோஸ் பிரதமர் சாண்ட்ரா மேசன் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் அலோக் ஷர்மா ஆகியோருடன் சுமுகமாகக் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வுகளில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தனவும் கலந்துகொண்டார்.

ஸ்லோவேனியா குடியரசின் தலைவர் பொருட் பஹோருடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை சந்திப்பொன்றை நடத்தினர்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு 17 வரை விளக்கமறியல்

## 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தை பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க உத்தரவு







(மன்னார் நகர் நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களில் 14 பேரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதோடு, 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க மன்னார் நீதவான் நேற்று (7) மதியம் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில், கடந்த சனிக்கிழமை இரவு 2 படகையும் அதில் இருந்த 15 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைதுசெய்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் (6) காலை தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது மீனவர்களில் இருவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்ட நிலையில், தலைமன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் (6) மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஏனைய 13 இந்திய மீனவர்கள், கடற்படையினின் விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் (6) மாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த மீனவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்நிலையில், சிகிச்சை பெற்றுவந்த 2 மீனவர்களும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நிலையில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த 15 இந்திய மீனவர்களையும் நேற்று திங்கட்கிழமை (7) மதியம் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் 14 பேரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதோடு, 14 வயது சிறுவனை சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.









அகில இலங்கை மற்றும் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் கொழும்பு இந்துக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. இதில் பிரதான அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் கலந்துகொண்டார். முரளிதரன் (பணிப்பாளர், பெருந்தோட்டப் பாடசாலை), நளினி ஆலாலசுந்தரம் ( தமிழ்ப் பாடசாலை, பணிப்பாளர்), நஜிமுல்தீன் (முஸ்லிம் பாடசாலைகள் பணிப்பாளர்), எச்.டீ.பிரேமதிலக்க (மேலதிக செயலாளர் கல்வி அமைச்சு ) உட்பட்ட பல விருந்தினர்கள் கலந்துகொண்டனர் (படங்கள் - மொஹமட் நசார்)



தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலை (நாட்டார் பாடல்) முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை சமூகம் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். (தலவாக்கலை நிருபர்)

# இந்தியாவை மீண்டும் கண்காணிக்க முயலும் சீனாவின் வாங் – 6 கப்பல்

## ஹம்பாந்தோட்டையில் நங்கூரமிடுமா?



இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைவதற்கு சீன உளவு கப்பலான யுவான் வாங்-6இற்கு அனுமதி வழங்கப்படாதென இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தை மேற்கோள்காட்டி, இந்திய ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

தமது நாட்டின் 200 கடல்மைல் தூரம்வரை பரவியுள்ள நாட்டின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் நுழைய, சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒடிசா பகுதியிலுள்ள ஏ.பி.ஜே. அப்துல் கலாம் சோதனை நிலையத்திலிருந்து இந்தியா அனுப்பவுள்ள ஏவுகணை பரிசோதனைகளை கண்காணிப்பதற்காக விசேடமாக அனுப்பப்பட்ட சீன இராணுவத்தின் உளவுக் கப்பல் இது என்கின்ற நிலையில், இந்தக் கப்பல் ஆராய்ச்சி கப்பல் என உத்தியோகபூர்வமாக பதியப்பட்டுள்ளது.

பங்களாதேஷின் சிட்டகொங்கில் இந்தக் கப்பலை நங்கூரமிடுவதற்கோ அல்லது இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இந்தக் கப்பலை நங்கூரமிடுவதற்கோ அனுமதி வழங்கப்படும் பட்சத்தில், அது தமது நாட்டின் அண்மித்த பகுதி என்பதனால், யுவான் வாங்-6 கப்பலினால் கண்காணிக்க முடியும் என இந்தியா தெரிவித்துள்ளது.

சீனாவின் கப்பலை நங்கூரமிடுவதற்கு, அண்மித்த நாடுகள் அனுமதி வழங்கினால், அது தமது நாட்டிற்கு பிரச்சினையாக அமையும் எனவும் இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

குறித்த கப்பலினால் தமது நாட்டின் அண்மித்த கடற்பரப்பிற்குள் வருகைதந்து, தமது நாட்டைக் கண்காணிக்க முடியும் என்பதை தாம் அறிந்துள்ளதாகவும் அந்த நாட்டு அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

தமது நாட்டின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்குள் வருகை தர ஒருபோதும் அனுமதி வழங்கப்படாது எனக் கூறியுள்ள இந்திய அதிகாரிகள், சர்வதேச கடற்பரப்பிலிருந்து கண்காணித்தால் அதனைத் தடுக்க தம்மால் முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கப்பலின் செயற்பாடுகளை தாம் தொடர்ச்சியாக அவதானித்து வருவதாகவும், தமது விண்வெளி கண்காணிப்புகள் அந்தக் கப்பலை கண்காணித்து வருவதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அத்துடன், தமது ஆளில்லா விமானங்களும் தங்களின் நீண்டதூர கடல்சார் கண்காணிப்பு விமானங்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் கூறியுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு சீனாவின் ஆராய்ச்சி கப்பலான சி யான்-1 அந்தமானின் போர்ட் பிளயரிற்கு அருகில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில், இந்தியக் கடற்படை அதனை வெளியேற்றியதாக கூறப்படுகின்றது.

சி யான் கப்பலும் ஆராய்ச்சி கப்பல் என்ற போர்வையில் செயற்படும் உளவுக் கப்பலெனக் கருதப்படுகின்றது என அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்தக் கப்பல் விவகாரத்தால் இந்திய கடற்படைக்கும், சீனாவிற்கும் இடையில் இராஜதந்திர மோதல் உருவானதாகக் கூறிய அதிகாரிகள், ஆனால், இந்தியா தனது நிலைப்பாட்டில் என்றுமே உறுதியாக உள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இம்முறை யுவான் வாங் கப்பல் தனது பொருளாதார வலயத்திற்குள் நுழைய முயற்சித்தால், சி யான் கப்பல் விவகாரத்தில் நடந்துகொண்டதைபோன்றே இந்தியா நடந்துகொள்ளும் எனவும் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

சீனக் கப்பல் எங்கு செல்கின்றதென இதுவரை அறிவிக்கப்படவில்லையெனக் கூறியுள்ள இந்திய அதிகாரிகள், அந்தக் கப்பல் சர்வதேச கடற்பரப்பிலேயே பயணிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# அனுபவமுள்ள தொழிற்சங்கவாதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள்!

## இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் சதாசிவம் கோரிக்கை









(செ.திவாகரன்)

மலையகத்தில் எத்தனை கூட்டணிகள் உருவாகினாலும் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. அரசியல் செய்வதற்காக கூட்டணிகள் உருவாக்கப்படுகின்றனவே தவிர, மக்களுக்கு சேவை செய்வதற்காக கூட்டணிகள் உருவாக்கப்படுவதில்லை - என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் புதிய காரியாலயத்தை நுவரெலியா நகரில் நேற்று (7) திறந்து வைத்த சதாசிவம், அங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய மலையகத் தலைமைகள் அரசியலில் செல்வாக்கை வளர்த்துக்கொள்வதற்காக மேடைகளில் ஒன்றுசேர்கின்றார்கள். தேர்தல் முடிந்தவுடன் பிரிந்துவிடுகின்றார்கள். இது இவ்வாறிருக்க, மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தேர்தல் காலங்களில் மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கின்றார்கள். ஆனால், தலைமைகள் ஒன்றாகத்தான் இருக்கின்றார்கள்.

இன்று தொழிற்சங்க அனுபவம் இல்லாத தொழிற்சங்கத் தலைமைகளால் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமல் இருக்கின்றது. தொழிலாளர்களுக்கு சரியான வழிநடத்தல் இல்லாத காரணத்தால் தொழிலாளர்கள் கம்பனிகாரர்களிடம் கொத்தடிமைகளாக வாழ்கின்றார்கள். கடந்த காலங்களில் தோட்ட நிர்வாகங்கள் வழங்கிய சலுகைகள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனை தட்டிக் கேட்பதற்கு அதிகாரத்திலுள்ள எந்தவொரு தொழிற்சங்க அரசியல் தலைமைகளும் முன்வருவதில்லை.

இன்று இந்த நாட்டில் டொலர் தட்டுப்பாட்டால் நாட்டில் பொருளாதாரம் சீரழிந்துபோயுள்ள நிலையிலும் வெளிநாட்டு டொலரைப் பெற்றுக் கொடுக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பற்றி அதிகாரத்திலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பாமல் மௌனம் சாதிக்கின்றனர். அனுபவமில்லாத தொழிற்சங்கத் தலைமைகள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றமையே இதற்குக் காரணம். எனவே, எதிர்வரும் காலங்களில் தொழிற்சங்க அனுபவமுள்ள அரசியல் தலைமைகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைய தொழிற்சங்க அரசியல் தலைமைகள் அரசியலில் காட்டும் அக்கறை, தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தில் காட்டுவதில்லை.

இதனாலே தொழிலாளர்கள் இன்றும் உரிமைகளை இழந்து அடிமைகளாகவும் வாழ்வாதாரத்தைக் கொண்டுசெல்ல முடியாமலும் அவஸ்தைப்படுகின்றனர். என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, நவம்பர் 08ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தீதும் நன்றும் பிறர்தர வாரா!

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பெண்ணொருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்றைய தினம் அவருக்குப் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

31 வயதான தனுஷ்க குணதிலக்க, கடந்த வாரம் சிட்னியின் கிழக்கில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணியளவில் சசெக்ஸ் ஸ்ட்ரீட் ஹோட்டலில் கைதுசெய்யப்பட்டதை பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

ரோஸ்பேயில் உள்ள ஒரு வீட்டில் 29 வயது பெண்ணொருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானதாக வந்த புகாரைத் தொடர்ந்து, மாநில குற்றப்பிரிவின் பாலியல் குற்றப்பிரிவு மற்றும் கிழக்குப் புறநகர் பொலிஸ் ஏரியா கட்டளை மையம் ஆகியவற்றின் துப்பறியும் அதிகாரிகள் கூட்டு விசாரணையை தொடங்கினர்.

நவம்பர் 2ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து தனுஷ்க குணதிலக்க மீது அனுமதியின்றி உடலுறவு கொண்டதாக நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஒன்லைன் டேட்டிங் செயலி மூலம் அந்தப் பெண் குணதிலக்கவுடன் பல நாட்களாக செய்திகளை பரிமாறிக்கொண்டதாக பொலிஸார் கூறுகின்றனர். இந்த ஜோடி புதன்கிழமை சந்தித்தது. அப்போது தனுஷ்க குணதிலக அந்தப் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ததாக பொலிஸ் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட முகவரியில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சனிக்கிழமை விசாரணை நடத்தினர்.

தனுஷ்க குணதிலக்க சிட்னி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அனுமதியின்றி உடலுறவு கொண்டதாக நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவருக்குப் பிணை மறுக்கப்பட்டது.

தனுஷ்கவுக்கு எதிராக நடந்த முதலாவது சம்பவம் இதுவல்ல. 2017ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான போட்டியில் ஒழுக்க விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக தனுஷ்க குணதிலக்கவுக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையில் பாதியை ஒத்திவைக்கப்பட்ட தண்டனையாகக் குறைக்க இலங்கை கிரிக்கெட் சபை முடிவெடுத்தது.

மேற்படி குற்றத்துக்காக தனுஷ்கவுக்கு ஆறு ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டது. அத்துடன், தனது வருடாந்த சம்பளப் பணத்தில் 20 சதவீதத்தை அவர் அபராதமாக செலுத்தவும் நேரிட்டது.

அதேபோல் இரண்டு வெளிநாட்டுப்பெண்கள் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு தனுஷ்க குணதிலக இடைக்காலத்தடைக்கு உள்ளாக்கப்பட்டார். அப்போது அனைத்து வகையான சர்வதேசப் போட்டிகளில் இருந்தும் அவருக்குத் தடைவிதிக்கப்பட்டது.

பலகாலமாக பிரச்சினைகளை தேடிப்போன ஒருவராக இருக்கும் தனுஷ்க, எல்லா மரங்களையும் கொத்திய மரங்கொத்தி இறுதியாக வாழைமரத்தில் கொத்தி மாட்டிக்கொண்டதுபோல் இப்போது சிக்கிக்கொண்டிருக்கிறார். கிரிக்கெட் விளையாட்டை பற்றிப் பேசிக்கொண்டிருந்த இலங்கை இளைய சமூகம் இன்று அந்த வீரர்களின் பாலியல் சேஷ்டைகளை பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தனுஷ்க நடந்துகொண்டது சரி, பிழை என்பதற்கப்பால் அவர் செய்த முதலாவது தவறு இதுவல்ல என்பதுதான் இங்குள்ள முக்கிய விடயம். கிரிக்கெட் வீரர் ஒருவரை யுவதி ஒருவரினூடாக அபகீர்த்தி ஏற்படுத்த எடுக்கப்பட்ட சதி முயற்சி இதுவென சில தரப்புகளால் கூறப்பட்டாலும் அது விவாதத்திற்குரியதல்ல. சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் எவ்வாறு பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கோவை இருக்கிறதே? அதுகூட தெரியாமல் தனுஷ்க இருந்தாரென்றால் அவர் இன்னமும் பாடம் படிக்க வேண்டும் என்று தானே அர்த்தம்.

இலங்கைக்கு கிரிக்கெட் விளையாட்டே உலகளாவிய ரீதியில் பெயரெடுத்துத் தந்தது. அதேபோல் இன்று அதே கிரிக்கெட்தான் அவப்பெயரையும் எடுத்துத் தந்திருக்கிறது. கிரிக்கெட் தொடரில் தோல்வியடைந்து கிரிக்கெட் வீரர்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து ஒரு பக்கம் விமானம் ஏற, இலங்கையின் மானம் மறுபக்கம் கப்பலேறிக்கொண்டிருந்தது. இந்த விடயம் இலேசான ஒரு விடயமல்ல. விளையாட்டின் அடிப்படைத் தகைமையே ஒழுக்கம்தான். ஆனால், அந்த ஒழுக்கத்தை மீறிச் செயற்பட கிரிக்கெட் மட்டுமல்ல, வேறெந்த விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் இலங்கை விளையாட்டுத்துறை இடமளிக்கக் கூடாது. எத்தனையோ திறமைவாய்ந்த இளைஞர்கள் வாய்ப்புக்காக காத்துக்கொண்டிருக்கும்போது வாய்ப்புக்கிடைத்தவர்கள் இவ்வாறு நடந்துகொள்வதை இலங்கை கிரிக்கெட் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதுபோல் நன்மைகளைப் போல தீமைகளை தேடிக்கொள்வதும் நாங்களே. தனுஷ்கவின் மூலம் ஏற்பட்ட அவப்பெயரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால் தீர்க்கவேண்டும் ஸ்ரீலங்கா கிரிக்கெட். அது ஏனைய வீரர்களுக்கும் முன்னுதாரணமாக இருக்கட்டும்.

# தேயிலைத் தமிழரின் தேயாத்தலைவர்...

புத்தர் பரிபூரண நிலையை எய்திய பின்னர், உலகெங்கும் அவரின் போதனைகளை எடுத்துச்சென்ற பிக்குகளின் ஆயிரமாண்டு காலக் கதைகளை வரலாறு பேசுகிறது. கண்டங்கள் தாண்டிச் சமயங்களைப் பரவச் செய்த சீடர்களின் கதைகள் கூட நாம் அறிந்ததே.

ஆனால், மானுடத்தை அணுவணுவாக நேசித்த ஒரு தமிழ்க்கவிஞனின் சொற்களில் புதைந்திருந்த அக்கினிக்கனலைச் சுமந்து கொண்டு, அடித்தள மக்களின் துயரங்களைத் துடைத்தெறிய அயலகம் சென்ற பேராளுமை ஒருவரின் பயணம், வரலாற்றுக்கு முற்றிலும் புதியது.

மகாகவி பாரதியாரின் விடுதலைத் தாகத்தைத் தன்னுள் நிரப்பிக் கொண்டு இலங்கைத் தேயிலைத் தோட்டத்தமிழரின் விதியை மாற்றச் சென்ற அம்மாமனிதர் கோ.நடேசய்யர்.




வாசித்தால் சிலிர்ப்பூட்டும் வாழ்க்கையைக் கொண்ட நடேசய்யர், 1891ஆம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம் வளவனூரில் பிறந்தவர். தஞ்சாவூர் கல்யாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளியில் வணிகப்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 'வர்த்தகமித்திரன்' என்னும் பத்திரிகையை நடத்தினார்.

காப்பீடு, மோட்டார் இயந்திரவியல், வங்கி நிர்வாகவியல் துறைகள் சார்ந்த நூல்களை எழுதி வெளியிட்டார். நடேசய்யரின் அடிநெஞ்சில் மகாகவி பாரதியாரின் எழுத்துகள் பெரும் புரட்சித்தீயை வார்த்து வந்தன. ஆங்கிலேய அரசு வங்காளத்தை இரண்டாகப் பிரித்திருந்த காலம் அது.

ஆங்கிலேய ஆதிக்கத்தைப் பொருளாதாரப் பார்வையைக் கொண்டுதான் வீழ்த்த முடியும் என்பது நடேசய்யரின் எண்ணம். தென்னிந்திய வர்த்தகர்கள் சங்கத்தையும் இந்திய மில்காரர்கள் சங்கத்தையும் தோற்றுவித்த நடேசய்யர், 'வர்த்தகமித்திரன்' பத்திரிகைக்கு உறுப்பினர்களைச் சேர்க்கவும், மில்காரர்கள் சங்கத்தின் புதிய கிளையைத் தொடங்கவும் 1919ஆம் ஆண்டு இலங்கைக்குச் சென்றார். சங்கக் கிளையைத் தொடங்கச் சென்றவரின் செவிகளில், இலங்கையின் மத்திய மாகாணத்தில், பல இலட்சம் இந்தியத் தமிழர்கள் தேயிலைத் தோட்டங்களில் படும் துயரங்கள் வந்து விழுந்தன.

கதைகளைக் கேட்டுப் பெருமூச்செறிந்து விட்டு நகரும் சாதாரண மனிதனாக இல்லாமல், அவர்களை சந்திப்பதென நடேசய்யர் தீர்மானித்தார். ஆனால், வெளியாட்கள் எவரும் ஊடுருவ இயலாமல், இலங்கை மலையகம் முழுவதையும் முள்வேலியிட்டு ஆங்கிலேய முதலாளிகள் மூடி வைத்திருந்தனர். தோட்டப் பிரதேசங்களில் அயலார் நுழைந்தால் கடும் தண்டனை வழங்கப்படும் என்ற சட்டம் அமலில் இருந்தது. கொடுங்குளிரும் கடுங்காவலும் நிறைந்த அம்மலையகத்திற்குள் ஒரு கம்பளித்துணி வியாபாரியின் வேடத்தில் நடேசய்யர் துணிந்து நுழைந்தார்.

அழகின் சொர்க்கமாக விரிந்து கிடந்த அம்மலைநாட்டின் மடியில், இந்தியத் தமிழர்களின் வாழ்க்கைச் சிதறிக்கிடந்த பெருங்கொடுமையைக் கண்களால் கண்டார். பன்றித் தொழுவத்தை விட மோசமான குடியிருப்புகள், குறைந்த கூலியில் உறிஞ்சப்பட்ட தொழிலாளர்களின் உழைப்பு, கந்தலாடை உடுத்தி, பனிமூடிக் கிடந்த மலைமுகடுகளில் தேயிலைக்கொழுந்து பறித்த சகோதரர்களின் அவலவாழ்வு ஆகியவற்றைக் கண்டு அவர் திடுக்கிட்டார்.

இலங்கைக்குக் குடிபெயர்ந்து ஒரு நூற்றாண்டு கழிந்த பின்னரும், ஓர் அங்குலம் கூட முன்னேற்றம் காணாத அந்த அப்பாவித் தமிழர்களின் பரிதாப வாழ்க்கை நடேசய்யரின் உள்ளத்தைக் கொதிக்க வைத்தது. மலையகத்தை விட்டுக் கீழிறங்கிய நடேசய்யர், நூறாண்டுக்கால இருள் கவ்விக் கிடந்த தமிழர்களை மீட்டெடுக்க இலங்கையிலேயே குடியேறிப் போராடுவதென முடிவெடுத்தார்.

இந்தியா திரும்பியவுடன், இலங்கையில் மடியும் இந்தியத் தமிழர்களின் வேதனை வாழ்வு குறித்து ஓர் அறிக்கையை இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையிடம் நேரடியாக அளித்தார்.

இலங்கைக்குப் புறப்பட முடிவெடுத்த நடேசய்யர், தன் 'வர்த்தகமித்திரன்' பத்திரிகையை வ.ராமசாமியிடம் (வ.ரா.) ஒப்படைத்தார். 1920ஆம் ஆண்டு இலங்கையில் குடியேறிய அவருடைய போராட்ட வாழ்வின் முதற்புள்ளி, தலைநகர் கொழும்பில் தொடங்கியது. அந்நாட்டின் தொழிற்சங்கத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்களுடன் இணைந்து அரசியல் களத்தில் இறங்கினார்.

தோட்டப்புறத் தமிழர்கள் பாமரர்களாக இருப்பதாலேயே ஆண்டாண்டுகளாக வெள்ளையர்கள் ஏமாற்றுகின்றனர் என்றுணர்ந்த நடேசய்யர், தமிழர்களின் வாழ்க்கையை அடியோடு மாற்ற முனைந்தார். முதற்கட்டமாக, மகாகவி பாரதியாரின் ஆயுதமான பத்திரிகையைக் கையிலெடுத்தார். 1921இல் அவர் தொடங்கிய 'தேசநேசன்' நாளிதழ் மலையகத் தமிழர்களின் உரிமைகளை உரத்துப் பேசியது. உண்மையில் இந்தியத் தமிழர்களின் சோக வாழ்வை இலங்கைக்கு அடையாளம் காட்டியதே, 'தேசநேசன்' தான்.

தமிழர்களின் துன்ப வாழ்வைப் பேச ஒரு பத்திரிகை போதாதென்று நினைத்து, தேசபக்தன், உரிமைப்போர், சுதந்திரப்போர், வீரன், சுதந்திரன், தோட்டத்தொழிலாளி, தி சிட்டிசன், தி எஸ்டேட் லேபரர்ஸ், இண்டியன் ஒப்பீனியன் என்று ஏறத்தாழ பத்துக்கும் மேற்பட்ட பத்திரிகைகளை நடேசய்யர் தொடங்கினார்.

"அச்சம் தவிர், கொடுமையை எதிர்த்து நில்" என்னும் பாரதியாரின் புதிய ஆத்திசூடியையும் "உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா" போன்ற கவிதை வரிகளையும் முகப்புகளில் சூடி நாள்தோறும் நடேசய்யரின் பத்திரிகைகள் வெளிவந்தன.

தொழிலாளர் உரிமைக்கும், பெண்ணுரிமைக்கும் பாரதி பாடிய கவிதை நெருப்பு, கடல் கடந்து 'தேசபக்தன்' நாளிதழில் புகைந்தது. அச்சமென்பதன் அடிச்சுவட்டைக் கூட அறியாத நடேசய்யர், மலையகத் தமிழர்களைக் 'குடியேற்றக்கூலிகள்' என்று ஏகடியம் பேசிய இலங்கையின் இனவாதிகள் அனைவரையும் துணிந்து எதிர்த்தார். சிங்களத் தீவின் கொடியில் இருந்த வாளேந்திய சிங்கம் போல் வீறுநடையிட்ட ஒரே தலைவர் நடேசய்யர்தான். மலையகத்தில் ஆங்கிலேயர்களால் குடியேற்றப்பட்ட இந்தியத் தமிழர்கள் மீது படிந்திருக்கும் அடிமை வாழ்வின் கொடூரங்கள் குறித்த தகவல்களைச் சேகரித்தார்.

தோட்டங்களுக்குள் நேரடியாகப் பயணித்து இரகசியமாகச் சேகரித்த அந்த அரிய ஆவணத்தை, இந்தியாவின் சிம்லாவில் கூட்டப்பட்ட புலம்பெயர்ந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் நிலை குறித்த ஆய்வு மாநாட்டில் தாக்கல் செய்தார் (1922).

முதன்முதலாக, இலங்கைத் தேயிலைத் தோட்டத் தமிழர்களின் பிரச்சினைகள் உலக அளவில் பேசப்பட்ட நிகழ்வு இதுவே. இதைத் தாக்கல் செய்து பேசிய நடேசய்யரின் உரை, ஆங்கிலேயத் தேயிலைத்தோட்ட முதலாளிகளை நடுநடுங்க வைத்தது.

நடேசய்யர் எடுத்த செயல்களில் எல்லாம் வெற்றியை ஈட்டியதன் பின்னணியில் நின்றவர், அவருடைய மனைவி மீனாட்சியம்மை ஆவார். மலையகத்தின் ஒவ்வொரு தோட்டமாகச் செல்லும் அந்தத் தம்பதியர், தோட்டத்தின் மையப்பகுதியில் வாகனத்தை நிறுத்துவர்.

அடுத்து, தமது இனிய குரலில், "தேயிலைத் தோட்டத்திலே பாரத சேய்கள் சென்று மாய்கின்றார் ஐயய்யோ" என்று மீனாட்சியம்மாள் பாடத்தொடங்குவார். கொழுந்துக்கூடையை இறக்கி வைத்துவிட்டு வந்து கூடும் தமிழர்களிடம், மகாகவி பாரதியாரின் கும்மி, சிந்து பாடல்களின் மெட்டுகளில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை பிரச்சினைகள் வெளிப்பட்டு அந்த மலை முழுக்க எதிரொலிக்கும். தொடர்ந்து தன் சிம்மக்குரலில் நடேசய்யர் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவார்.

சாதி வேற்றுமைகளை ஒழித்து, தீண்டாமை வழக்கத்தை அறவே ஒதுக்கி, கள்ளுண்பதை விடுத்து, துணிவுடன் நிமிர்ந்து நிற்கும் நாளிலேயே விடுதலையை சுவாசிக்க முடியும் என நடேசய்யர் உரையாற்றுவார். இப்படி அந்த மலைநாடு முழுக்க நாட்கணக்கில் பயணித்து, அவ்விருவரும் தொழிலாளர்களின் உள்ளங்களில் நம்பிக்கையை விதைத்தனர்.

1925ஆம் ஆண்டு இலங்கை சட்ட நிரூபண சபைக்குத் தமிழர்கள் பிரதிநிதியாக நடேசய்யர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி, மலையகத் தமிழரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவர் கொண்டு வந்த தீர்மானங்கள், சிறப்புக் கவனயீர்ப்புகளால் சட்டசபையில் புயலும் சூறாவளியும் வீசின.

நடேசய்யருடைய உரைகளில், மலையகத் தமிழர்களின் உடல்களைப் பிணித்திருந்த நூற்றாண்டின் சங்கிலிகள் உடைந்து நொறுங்கத் தொடங்கின. 1936 நேரடித்தேர்தலில் போட்டியிட்டு மலையகத் தமிழர்களின் உறுப்பினராக வெற்றி பெற்றார். தேயிலைத் தோட்டத் தமிழருக்கான உரிமைகளை ஓய்வில்லாப் போராட்டங்களால் வென்றெடுத்தார். இலங்கை அரசியலில் மலையகத் தமிழருக்கான பக்கங்களை நடேசய்யரின் செயல்பாடுகள் திறந்து வைத்தன.

இலங்கை மலையகத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடியும் நடேசய்யரே. சிறுகதை, நாவல், நாடகம், கருத்துச்சித்திரம், தன்னம்பிக்கை நூல்கள், பயண இலக்கியம் என்று அவர் தொடாத வடிவமே இல்லை. அடித்தளத் தொழிலாளர்களின் தோள்களை அணைத்துக் கொண்டு, இலங்கை அரசியலில் 28 ஆண்டுகள் தனிநடையிட்ட தன்னிகரில்லாத் தலைவர் கோ.நடேசய்யர்.

எந்த மலையக மண்ணுக்காகப் பாடுபட்டாரோ, அதே மண்ணின் அரசியல் துரோகங்கள் அவரை 1947 பொதுத்தேர்தலில் தோல்வியடையச் செய்தன. அந்த அதிர்ச்சி விலகாத நிலையில், 07.11.1947 அன்று மலையகத் தமிழரின் மனசாட்சியாக வாழ்ந்த கோ.நடேசய்யர் அமரரானார்.

வெறும் 56ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த நடேசய்யர், தன் வாழ்க்கையின் சரிபாதியை இந்தியத் தமிழர்களுக்குக் கொடையாக ஈந்தார். அவர் மட்டும் கம்பளி வியாபாரியாக வேடமிட்டு, இலங்கை மலையகத்தில் கால் பதித்திராவிட்டால், அத்தேயிலைத் தமிழர்களின் நூற்றாண்டுக் கண்ணீர், வெளியுலகம் அறியாமல் அக்குளிரிலேயே உறைந்து மறைந்திருக்கும்.

*(நவம்பர் 7ஆம் திகதி கோ.நடேசய்யரின் 75ஆம் ஆண்டு நினைவு தினமாகும்.)*

**இரா.குறிஞ்சிவேந்தன்**
**பேராசிரியர்**

**(நன்றி: தினமணி)**

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1811 – இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இதன்படி கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும், யாழ்ப்பாணத்தில் கீழ் நீதிமன்றமும் அமைக்கப்பட்டன. குற்றவியல் வழக்குகளுக்கு சான்றாயர் விசாரணை முறையும் அமுலுக்கு வந்தது.
- 1895 – எதிர்மின் கதிர்களைச் சோதனையிடும் போது வில்லெம் ரோண்ட்கன் எக்ஸ் - கதிர்களைக் கண்டுபிடித்தார்.
- 1965 – பிரித்தானியாவில் மரணதண்டனை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
- 2006 – மட்டக்களப்பு வாகரையில் இலங்கை இராணுவத்தினர் ஏவிய பல்குழல் எறிகணை வீச்சுத் தாக்குதலில் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 125க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
- 2013 – ஹையான் சூறாவளி பிலிப்பைன்ஸில் விசயன் தீவுகள் பகுதியைத் தாக்கியதில், 6340 பேர் உயிரிழந்தனர்.

# பேராதனை பல்கலையில் செயலி மூலம் ஆபாசப்பட பகிடிவதை

## பொலிஸார் விசாரணை

பேராதனை பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட மாணவர்கள் குழுவொன்று புதிய மாணவர்களுக்கு இணையத்தளத்தில் ஆபாச இணையத்தளங்களின் முகவரிகளை அனுப்பி அவற்றைப் பார்த்து பதிலளிக்குமாறு அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படும் பகிடிவதை சம்பவம் பற்றி விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார விஞ்ஞான பீடத்தின் புதிய மாணவர் ஒருவர் முறைப்பாடு செய்ததையடுத்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தலைமை ஒழுக்காற்று அதிகாரி கடந்த சனிக்கிழமை (5) பேராதனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

புதிய மாணவர்களின் தொடர்புத் தொலைபேசி எண்களை உள்ளடக்கி, இணை சுகாதார அறிவியல் பீடத்தின் மூத்த மாணவர்கள் குழு ஒரு வட்ஸப் குழுவை உருவாக்கி, அதற்கு ஆபாசமான இணையத்தளங்களின் முகவரிகள் மற்றும் புகைப்படங்களை அனுப்பியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.




அவற்றைப் பார்த்து, தாம் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளிக்குமாறு புதிய மாணவர்களை அவர்கள் மிரட்டியதாகக் கூறப்படுகிறது.

புதிய மாணவர்களை ஆபாசமான காட்சிகள் மற்றும் புகைப்படங்களைப் பார்த்த பின்னர் பதிலளிக்குமாறு கோரிய சில அச்சுறுத்தும் ஒலிநாடாக்கள் அடங்கிய தொலைபேசி இலக்கத்தையும் ஒழுக்காற்று அதிகாரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

மாணவர்கள் இரகசியமாக புகார்களை அளிப்பதற்காக இணையப் பக்கமொன்றை பல்கலைக்கழகம் திறந்துள்ளது. அதன்மூலம் புதிய மாணவர் புகார் அளித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புத்தளம் மோதலில் ஒருவர் உயிரிழப்பு

புத்தளத்தில் நேற்று முன்தினம் (6) மூவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 43 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் அருகிலுள்ள கடையொன்றுக்குச் சென்றிருந்தபோது, கடையின் உரிமையாளருடன் இரு நபர்கள் தகராறில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அங்கு குறித்த நபர் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதனால், சந்தேகநபர்களால் அவர் கத்தியால் குத்தப்பட்டார்.

காயமடைந்தவர் உடனடியாக புத்தளம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 43 வயதுடைய வில்லிவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பல்பொருள் அங்காடியில் 12 இலட்சம் ரூபாவுக்கும் மேல் பணம் திருட்டு

## காசாளரான இளம் யுவதி கைது

அளுத்கமை தர்கா நகரிலுள்ள சிறிய சிறப்பு அங்காடியில் காசாளராகத் தொழில் புரிந்து வந்த யுவதி சுமார் 12 இலட்சம் ரூபா பணத்தை மோசடியான முறையில் திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக சிறப்பு அங்காடியின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய நடத்திய விசாரணைகளையடுத்து சந்தேக நபரான 18 வயதான யுவதியை கைதுசெய்ததாக அளுத்கமை பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த வர்த்தகருக்கு தர்கா நகர் மற்றும் அளுத்கமை ஆகிய இடங்களில் சிறப்பு அங்காடிகள் இருப்பதாகவும், தர்கா நகரில் உள்ள அங்காடியிலேயே இத்திருட்டுச் சம்பவம் நடந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தர்கா நகரை சேர்ந்த யுவதியே கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

சந்தேக நபரான யுவதி ஒரு மாதத்திற்குள் அவ்வப்போது இவ்வாறு பணத்தை திருடியுள்ளார். அத்துடன் கொள்ளையிட்ட பணத்தில் 7 இலட்சம் ரூபா பணத்தை திரும்பிக் கொடுத்துள்ளார்.



திருடப்பட்ட பணத்தை வங்கிக்கணக்கில் வைப்புச் செய்துள்ளார். சந்தேக நபரான யுவதி, பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை அவ்வப்போது திருடி, தனது வங்கிக்கணக்கில் வைப்புச் செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நம்பிக்கை துரோகம் மற்றும் கொள்ளையடிப்பு ஆகிய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள யுவதி நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். சம்பவம் தொடர்பாக அளுத்கமமை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் விலை தொடர்பில் எந்த மாற்றங்களும் இல்லை

## சூத்திரம் தொடர்பில் எரிசக்தி அமைச்சு தகவல்




விலை சூத்திரத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும் எரிபொருட்களின் விலை தொடர்பான செயற்பாட்டில் எந்தவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படாது என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலையில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமைய, விலை சூத்திரத்தை பயன்படுத்தி எரிபொருள் விலை நிர்ணயிக்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15ஆம் திகதிகளில் எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய விலைகள் நிர்ணயிக்கப்படும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், இந்த விலை சூத்திர செயற்பாட்டிற்கு எரிபொருள் விநியோகத்தர்கள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எரிபொருள் விலை எதிர்வரும் தினங்களில் குறைக்கப்படும் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில், கடந்த சில தினங்களாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள், எரிபொருள் கொள்வனவு செய்யவில்லை என அறிய முடிந்தது.

இதனால், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. எனினும், இம்முறை எரிபொருள் விலைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படாது என விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்த நிலையில், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மீண்டும் எரிபொருள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இதன்படி, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழமை போன்று எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது..

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குக!

## வடமாகாண பட்டதாரிகள் ஒன்றியத் தலைவர் கோரிக்கை




பட்டதாரி நியமனத்தில் 35 வயதிற்கு மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குமாறு வடமாகாண பட்டதாரிகள் ஒன்றிய தலைவர் சிவசுப்பிரமணியம் லோகதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர்அவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

35 வயதிற்கு மேற்பட்ட 8000 பட்டதாரிகள் பாடசாலை ஆசிரியர் பயிற்சிக்காக காத்திருக்கிறார்கள்.

அரசாங்க சேவையில் 35 வயதிற்கு மேற்பட்ட பட்டதாரிகளை நியமனத்திற்கு உள்வாங்கியது போன்று 35 வயதிற்கு மேற்பட்ட பட்டதாரிகளாக இருக்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்த சந்தர்ப்பத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் தொண்டராசிரியர்கள் நூறு நாட்கள் பாடசாலையில் தேசிய பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயிற்சியின் பின்னர் சட்டப்பிரமாணங்களின் படி ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டார்கள்.

அதேபோல் 2018ஆம் ஆண்டு தேசிய பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேர்முக மற்றும் பரீட்சை மூலமும் உள்வாங்கப்பட்டார்கள்.

இந்நிலையில், எம்மை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குவதற்கு பரீட்சை ஒன்றை வைத்து அதன் மூலம் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆனால், தற்போது அரசாங்கம் இருக்கும் சூழ்நிலையில் எம்மை பரீட்சை மூலம் உள்வாங்குவதற்கு நிதி உட்பட பல இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அதனை சமாளிப்பதற்காக எமது அரசாங்கத்திற்கு நாம் செய்யும் தியாகமாக எம்மை ஒரு வருடகாலத்திற்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து அதன் பின்னர் எம்மை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கினால் அரசாங்கத்திற்கு செய்யும் தியாகமாக அமைவதுடன், அரசாங்கத்தின் நிதிப் பிரச்சினைக்கும் தீர்வாக அமையும் என்று தெரிவித்தார்.

# விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு நிதியுதவி




அண்மையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு லைக்கா நிறுவன உரிமையாளர் நிதியுதவி அளித்துள்ளார்.

பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

கிட்டத்தட்ட இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்த இந்த அரசியல் கைதிகளுக்கு லைக்கா நிறுவன உரிமையாளர் நிதியுதவி அளித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குறிப்பிட்ட அரசியல் கைதிகளுக்கு மதிய போசனமளித்து, நிதியுதவியும் அளித்தார்.

அந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொண்டிருந்தார்.

இதேவேளை, 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கும் தலா ரூ.25 இலட்சம் ரூபா வழங்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச அதிகாரிகளின் இலஞ்ச ஊழல் பற்றி அறிவிக்க 1905 அறிமுகம்

அரச அதிகாரிகளின் இலஞ்சம் மற்றும் ஊழல் குறித்து தெரிவிக்க 1905 என்ற தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம சேவகர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களில் பணி புரியும் அதிகாரிகளின் இலஞ்சம் அல்லது ஏனைய முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளை மேற்படி தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும் என உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.









**வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் (06) பிற்பகல் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் மண்டபத்தில், கல்லூரியின் முதல்வரும் முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவருமான ஆனந்தராஜா தலைமையில் ஆரம்பமானது. இதன்போது சங்கத்தின் பழைய யாப்பு சீர்திருத்தம் செய்து சபையில் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாப்பில் சிறிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. பின்னர் புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டு நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.**

திகதி 06.11.2022
ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4931
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,975,730.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 2 0 7 7 6 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 39,474,089.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3173
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,710,740.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 29 56 59 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 62,212,494.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1386
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,615,380.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 7 2 0 6 9 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.10,446,530.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 961
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,034,600.00
வெற்றி இலக்கினம் L வெற்றி இலக்கங்கள் 14 21 25 36
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 131,913,447.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 240
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 6,305,840.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 24 26 29 44
விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.2,634,727.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
L 06 02 31 32 64
சீட்டிழுப்பு இலக்கம் 1279
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,740,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.279,648,846.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# சுதுமலையில் துணிகரத் திருட்டு!

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலை வடக்கு பகுதியிலுள்ள வீடொன்றில் 3 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வீட்டிலுள்ளவர்கள் மேல் மாடியில் தூங்கி விட்டு நேற்று முன்தினம் (06) காலை எழுந்து வந்து கீழே பார்த்தபோது வீடு உடைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பணம் வைத்த இடத்தைப் பார்த்தபோது, வைக்கப்பட்ட மேற்குறித்த அளவு பெறுமதியான பணம் களவு போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சவாரி மாட்டை இறைச்சிக்கு வெட்டியவர்கள் யாழில் கைது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி பகுதியில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சவாரிக்கு பயன்படுத்தப்படும் மாடொன்று களவாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாட்டின் உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

இது தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் (06) மாட்டைக் களவாடிய சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது களவாடப்பட்ட மாடு இறைச்சிக்காக வெட்டப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




**சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு, சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 B 1 யும் வடமாகாண லயன்ஸ் கழகங்களும் இணைந்து நடத்தும் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனியும் மருத்துவ முகாமும் நேற்று யாழில் இடம்பெற்றது.**

**மாவட்ட ஆளுநரின் பிரதம ஆலோசகரும் சுகாதாரத்துறைக்கு பொறுப்பானவருமான டொக்டர் கே.எம்.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் முன்னாள் பணிப்பாளர் லயன் சுனில் வட்டவல பிரதம விருந்தினராகவும், முன்னாள் மாவட்ட ஆளுநரும், முன்னாள் மாவட்ட ஆளுநர்களின் ஆளுநர் சபைத்தலைவருமான லயன் டொக்டர்.வி.தியாகராஜா சிறப்பு விருந்தினராகவும், கண் சத்திரசிகிச்சை நிபுணர் லயன் டொக்டர்.எஸ். சந்திரகுமாரும் கலந்துகொண்டனர்.**

# கனவரல்ல மவுஸாகல பகுதிக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை; 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் தற்காலிக இடம்பெயர்வு





(நடராஜா மலர்வேந்தன்)

பசறை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கனவரல்ல மவுஸாகல தோட்டத்தில் மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை காரணமாக சுமார் எட்டு குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் கொட்டுஹாதன்ன சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தற்காலிக முகாமிடப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்படைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மாவட்டத்தில் பல பகுதிகளிலும் அடைமழை பெய்து வருகின்றது.


இதன் காரணமாக நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதோடு, பெரும்பாலான பயிர்ச்செய்கை நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அதிக பனிமூட்டம் காரணமாக குளிர்கால நிலை நிலவுகின்றமையால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



பதுளை மாவட்டத்தில் மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ள நிலையில், பொது மக்களை அவதானத்துடன் செயற் படுமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம்பணிப்புரை விடுத்துள்ளது. மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அச்ச நிலைமைக்குள்ளாகியுள்ளனர். குறிப்பாக வாகன சாரதிகளை அவதானத்துடன் பயணிக்குமாறு போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

புஹுல்வத்த கிராம சேவையாளர் பிரிவில் ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உலருணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்தி பசறை பிரதேச செயலகம் இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தலவாக்கலை பஸ் நிலையத்தில் கட்டப்பட்டுள்ள குளவிக் கூடுகளை அகற்றுமாறு கோரிக்கை


(தலவாக்கலை நிருபர்)

தலவாக்கலை பஸ் நிலைய கட்டடத்தில் குளவிக் கூடுகள் கட்டப்பட்டுள்ளதால் பயணிகளும் பிரதேச மக்களும் பெரும் அச்சமடைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பஸ் நிலைய கட்டடத்தில் பல இடங்களில் பெரிய பெரிய குளவிக் கூடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் குளவிக் கூடுகளை சுற்றி காகங்கள் மற்றும் புறாக்கள் சுற்றித்திரிவதால் அந்தப் பறவைகள் குளவிக் கூடுகளை கிளறி குளவிகளைக் கலைத்து விடுவதால் பஸ் நிலையம் மற்றும் அதனை அண்மித்து காணப்படும் கடைகளுக்கு வந்துபோகும் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏராளமானோர் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் இங்கு பாதுகாப்பற்ற நிலையேற்பட்டுள்ளது. எனவே, மக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு குளவிக்கூடுகளை விரைவில் அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் அதிகாரிகளும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலவாக்கலை பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# காணி துப்புரவு செய்கையில் மீட்கப்பட்ட மண்டையோடு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

தனது காணியைத் துப்புரவு செய்துகொண்டிருக்கையில் மண்டையோடு ஒன்று கிடைத்தமை குறித்து குருவிட்ட எரத்ன வீதியில் எக்னலிகொட பகுதியில் வசிக்கும் ஒருவர் நேற்று முன்தினம் குருவிட்ட பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த முறைப்பாட்டாளர் டெங்குத் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாத்து கொள்வதற்காக தனது காணியை துப்புரவுசெய்து கொண்டிருக்கையில் இம்மண்டையோடு கிடைத்ததாக தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இவ்விடத்துக்கு அண்மித்ததாக வியாபார நிறுவனம் ஒன்றை நடத்திவந்த தரப்பினர் அண்மையில் நடத்திய பூஜை ஒன்றுக்கு இந்த மண்டையோட்டை எடுத்து வந்து பயன்படுத்திவிட்டு இக்காணியில் வீசி இருக்கலாமென இப்பிரதேச மக்கள் பொலிஸாரிடம் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

எனினும், இந்த மண்டையோடு கொலைசெய்யப்பட்ட ஒருவருடையதா என்பதையும் இது எவ்வாறு இவ்விடத்துக்கு கொண்டு வரப்பட்டது என்பதையும் கண்டறிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




**உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கண்டி முஸ்லிம் ஒலிபரப்பு சேவை மாருகொனயில் நடத்திய "திறமைக்கோர் களம்" நிகழ்ச்சியின் இறுதியில் மாத்தளையைச்சேர்ந்த ஆய்வு நூலாசிரியர் ஏ.எஸ்.நஜிமுதீன் ஹாஜி, தான் எழுதிய ஆய்வு நூல்களை கலந்துகொண்ட பிரமுகர்களுக்கு கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.**

**(படங்கள் - உக்குவளை நிருபர்)**

# மரணித்தவர்களின் பெயர்களிலும் ரூ. 50 இலட்சம் கடன்பெற்று மோசடி

(பலாங்கொடை நிருபர்)

எஹலியகொட, புளுகஹபிடிய சனச வங்கியின் வைப்புகளில் இருந்து 50 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை நிதி மோசடி செய்யப்பட்டுள்ளமை குறித்து இவ்வங்கியின் தலைமைக் காரியாலய கணக்காய்வுப் பிரிவு விசாரணைகள் மேற்கொண்டுள்ளது.

இவ்வங்கியில் வருடாந்த கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது கடன் பெற்ற சில அங்கத்தவர்களின் கையொப்பங்களில் வித்தியாசங்கள் தென்பட்டதையடுத்து சந்தேகத்தின் பேரில் இவ்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வங்கியில் கணக்குகளை வைத்திருந்து மரணித்தவர்கள் மற்றும் செயல்படுத்தப்படாதுள்ள கணக்கு உரிமையாளர்களின் பெயர்களில் இக்கடன்கள் பெறப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வுகளில் இவ்விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணை நடத்திவரும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இம்மோசடி நிகழ்வுகள் வங்கி முகாமையாளரால் இடம்பெற்றனவா அல்லது ஏனைய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டவா என விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# யாழிலிருந்து நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பஸ்களுக்குக் கட்டுப்பாடுகள்



## வடமாகாண ஆளுநரின் அதிரடி நடவடிக்கை

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தூர சேவைகளில் ஈடுபடும் பஸ்களின் வழித்தடங்களை பரிசோதித்தல், நேரக் கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற சில நடைமுறைகளை மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை (05) அதிகாலை இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் பூரண விசாரணை அறிக்கையொன்றைக் கோரியுள்ளேன். அதன் பின்னரே விபத்துக்கான காரணம் தெரியவரும். அதேநேரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரோடு உரையாடி ஒரு சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

அதாவது, யாழ்ப்பாணம் - கொழும்பு மற்றும் ஏனைய இடங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து சேவையை மேற்கொள்ளும் பஸ்களின் வழித்தட அனுமதிகளைப் பரிசோதிப்பது, யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் வட மாகாணத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் தூர சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரித்து நின்று குறைந்தது 10 நிமிடங்களாவது ஓய்வெடுத்துச் செல்லக் கூடியவாறான நிலையை உருவாக்குதல், ஒவ்வொரு மாத இறுதியிலும், நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பஸ்களின் தரத்தைப் பரிசோதித்து, அதனை உறுதிப்படுத்திக்கொள்ளல், பஸ் பயணத்திற்கான நேரக் கட்டுப்பாடுகளை விதித்தல். போன்ற விடயங்களை கலந்துரையாடியிருந்தேன்.

இவற்றை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவருவதன் ஊடாக பஸ் விபத்துகளை கட்டுப்படுத்த முடியுமென நம்புகிறேன் - என்றார்.

# யாழ். கலைத்தூதுக் கலையகத்தில் இடம்பெற்ற 'உயிராயுதம் குறுங்காவியம்' நூல் வெளியீடு






(யாழ். நிருபர்)

கவிஞர் மு.சிங்கராயர் எழுதிய 'உயிராயுதம் குறுங்காவியம்' எனும் நூல் வெளியீடு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத் தூதுக் கலையகத்தில் நேற்று முன்தினம் (06) கிளிநொச்சி அன்னை இல்ல இயக்குனர் அருட்திரு செ.அன்புராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு.ஏ.பி.திருமகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வுநிலை அதிபரும், மூத்த கவிஞருமான சோ.பத்மநாதன் நூலின் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா நூலை வெளியிட்டு வைத்ததுடன், கவிஞர் மு.சிங்கராயரையும் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணுக்காய் பிரதேச இளைஞர் அணி நிர்வாகத் தெரிவு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச இளைஞர் அணி நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் (06) மல்லாவி கோவில் பொது மண்டபத்தில் துணுக்காய் பிரதேச சபையின் துணைத் தவிசாளர் சிவகுமார்(குட்டி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டதுடன், யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய குருக்கள் அதிவணக்கத்துக்குரிய ஞானப்பிரகாசமும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் சிவநேசன் பவன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அணி அமைப்பாளர் யூட்சன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் ஆறுமுகம் ஜோன்சன், மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சரஸ்வதி, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், துணுக்காய் பிரதேச இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

துணுக்காய் பிரதேச ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் இளைஞர் அணி நிர்வாகத் தலைவராக யதுசனும், செயலாளராக திரிசயனும், பொருளாளராக கவிந்தனும் மேலும் உப தலைவர், செயலாளர் உட்பட 11பேர் கொண்ட நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

இந்நிகழ்வில் துணுக்காய் பிரதேச மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களான தமிழ்நிலவன், லிந்துஜா, துஷ்யந்தினி ஆகியோர் மாகாண மட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய சாதனையாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினரால் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், ஊக்குவிப்பு நிதியுதவியும் கட்சியின் நிர்வாகத்தினால் வழங்கப்பட்டது. இளைஞர் அணி செயலாளரால் நன்றியுரையுடன் கட்சியின் பிரதேச இளைஞர் அணி நிர்வாகத் தெரிவு நிறைவு செய்யப்பட்டது.

# 15 இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது

(மன்னார் நிருபர்)

கச்சதீவு அருகே மீன்பிடித்த இராமேஸ்வரம் மீனவர்கள் 15 பேரை இலங்கைக் கடற்படையினர் கடந்த சனிக்கிழமை (05) இரவு 2 படகுகளுடன் கைதுசெய்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்திலிருந்து சனிக்கிழமை 539 விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். நள்ளிரவு கச்சதீவுக்கும்,நெடுந்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் 2 படகுகளை சிறைபிடித்தனர்.

அதிலிருந்த 15 மீனவர்களையும் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். தொடர்ந்து 15 மீனவர்களும் மன்னார் நீரியல்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதையடுத்து, இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவ சங்கம் சார்பில் அவசரக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில், இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து கைதுசெய்வதற்கு கண்டனம் தெரிவித்ததுடன், படகுகள், மீனவர்களை உடனே விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி திங்கட்கிழமை ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்வது, செவ்வாய்க்கிழமை தங்கச்சிமடம் பஸ் நிறுத்தம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்துவது, அதன்பின் அடுத்தகட்டப் போராட்டம் மேற்கொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதையடுத்து நேற்று முதல் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கியிருக்கிறார்கள்.

இதனால், நேற்று திங்கட்கிழமை காலை மீன்பிடிக்க அவர்கள் செல்லவில்லை. 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள், கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால் நேரடியாகவும், மறைமுகமாகவும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை இழந்திருக்கிறார்கள். மேலும், நாளொன்றுக்கு 5 கோடி ரூபாவுக்குமேல் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஆரியகுளம் நாகவிகாரையில் இன ஐக்கியத்திற்கான பிரித் பாராயணம்






(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரையில் இன ஐக்கியத்திற்கான விசேட தானம் வழங்கும் பிரித் பாராயணம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ராக்கேஷ் நட்ராஜ், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் உட்பட பலரும் கலந்துகொண்டு தானத்தை வழங்கினர்.

இந்நிகழ்வில் மீகஹஜந்துர சிறிவிமலதேரர், படைப்பிரிவுகளின் உயரதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள், சர்வமதத் தலைவர்கள், பௌத்த துறவிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# இன்று பூரண சந்திர கிரகணம்!

| | | | |
|---|---|---|---|
| குரு | ல<br>ராகு<br>சந் | மா | செவ் |
| | பரணி<br>08-நவம்பர்-2022<br>5.57 Pm<br>தீர்காம்ஷம் - 79.52<br>அக்ராம்ஷம் - 79.52 | | |
| சனி | | | |
| | | சூ பு சு<br>கே | |

இந்த வருடத்தின் இறுதி சந்திர கிரகணம் இன்று செவ்வாய்க்கிழமை, அதாவது, தமிழுக்கு வரும் ஐப்பசி மாதம் 22ஆம் திகதி இலங்கை நேரப்படி பிற்பகல் 2 மணி 58 நிமிடத்திற்கு ஆரம்பித்து மாலை 6 மணி 19 நிமிடம் வரை நீடிக்கிறது. அதிலும் மாலை 5 மணி 32 நிமிடத்திற்கு மேல் சந்திர கிரகணம் முழு அளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது ஜோதிட விதியாகும். இன்றைய தினம் கிழக்கு வானில் கிரகணம் பற்றியபடியே சச்திரன் உதயமாவார்.

சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது கிரகணங்கள் ஏற்படுகின்றன. இதில் சந்திரன் மறைக்கப்படும்போது சந்திர கிரகணமும் சூரியன் மறைக்கப்படும்போது சூரிய கிரகணமும் நிகழ்கின்றன.

பௌர்ணமி தினமன்று சந்திர கிரகணமும், அமாவசை தினத்தன்று சூரிய கிரகணமும் நடக்கும். இதில் பெரும்பாலோருக்கு தெரியாத ஓர் உண்மை என்னவெனில், பௌர்ணமி திதி முடிந்து அடுத்த பிரதமை ஆரம்பிக்கவிருக்கும் நேரத்தில்தான் எப்போதுமே சந்திர கிரகணம் நடக்கும்.

கிரகணங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று ராகுவால் ஏற்படும் கிரகணம். இன்னொன்று கேதுவால் ஏற்படும் கிரகணம். இந்த இரண்டு வகைகளில் தற்போது ஏற்படுவது சந்திரனுடன் ராகு இணைவதால் ஏற்படும் ராகு க்ரஸ்த கிரகணமாகும்.

இனி ஜோதிட ரீதியாக இந்தக் கிரணங்களை பார்க்கப்போவோமேயானால் ராகு கேதுக்களை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உணர்ந்து இவை ஏற்படும் நேரங்களை முன்கூட்டியே கணித்து இவற்றை ஜோதிடத்திலும் பயன்படுத்திய நம் ஞானிகளின் மேன்மை வெளி நாட்டினரைக் கூட வியக்க வைக்கும் ஒன்று.


ஜோதிடத்தில் மட்டுமே ராகு கேதுக்களுக்கு கிரக அந்தஸ்து கொடுக்கப்பட்டு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன. இராமாயண காலம் எனப்படும் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் ராகு கேதுக்களைப் பற்றிய குறிப்புகள் நம்மிடையே இல்லை.

ஒரு வருடத்தில் சாதாரணமாக இரண்டு சூரிய கிரகணங்களும் இரண்டு சந்திர கிரகணங்களும் ஏற்படும். சிலசமயம் மூன்று கிரகணங்கள் ஏற்படுவதுமுண்டு. இம்முறை செவ்வாய்க்கிழமை ஏற்படும் கிரகணம் பரணி நட்சத்திரத்தில் நடக்கிறது. அதாவது, பரணி நட்சத்திரத்தில் ராகுவும் சந்திரனும் இணையும் நேரத்தில் தான் இந்தக் கிரகணம் ஏற்படுகிறது.

கிரகணத்தின்போது கிரகணம் ஏற்படும் நட்சத்திரத்திற்கு முன்பின் நட்சத்திரங்கள் மற்றும் அதே நட்சத்திரத்தின் திரிகோணபத்தாவது நட்சத்திரங்களான அந்த நட்சத்திர அதிபதியின் மற்ற நட்சத்திரங்களும் தோஷம் அடையும் என்ற ஜோதிட விதிப்படி, இந்தக் கிரகணத்தினால் கிரகணம் பற்றும் நட்சத்திரமான பரணி, மற்றும் அசுவினி, கார்த்திகை 01ஆம் பாதம், பூசம், உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை, 1, 2ஆம் பாதங்கள், பூராடம் ஆகிய நட்சத்திரக்காரர்களுக்கு சந்திரன் சம்பந்தப்பட்ட விடயங்களில் தோஷங்கள் ஏற்படும்.


இதனால் கிரகணம் நிகழும் ராசியான மேஷம் மற்றும் ராசிகளான இடபம் (ரிஷபம்) மற்றும் கடகம், கன்னி, தனுசு ஆகிய ராசிகளுக்குள் அடங்கிய மேற்கண்ட நட்சத்திரக்காரர்கள் பரிகாரம் செய்துகொள்வது நல்லது.

மேற்கண்ட நட்சத்திரக்காரர்களின் தாயாருக்கோ, தாயார்வழி உறவினர்கள், அல்லது தாய்வழி அமைப்புகளில் கெடுபலன்களோ அல்லது மேற்கண்ட நட்சத்திரக்காரர்களின் ஜாதகங்களில் சந்திரன் எந்த ஆதிபத்தியத்திற்கு உரியவரோ அந்த பாவபலன்களில் குறைகளும் கெடுபலன்களும் இருக்கும்.




சந்திரன் ராகுவால் பீடிக்கப்படுவதால் மேற்கண்ட நட்சத்திரக்காரர்கள் கிரகண தினத்தன்று ஆதரவற்ற ஏழை, எளியோருக்கு தங்களால் இயன்ற அளவுக்கு உளுந்தப்பருப்பை தானம் செய்வதும் உளுந்தினாலான உளுந்தங்கஞ்சி, மெதுவடை போன்ற உணவுப் பொருட்களை தானம் செய்வதும் கெடுபலன்களிலிருந்து தற்காத்துக்கொள்ளும் சிறந்த பரிகாரங்கள்.

பூமி பிறந்ததற்கும் பூமியில் உயிர்கள் தோன்றியதற்கும் சூரிய ஒளியும் சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரனின் ஒளியுமே முக்கிய காரணம் என்பதால் மேற்கண்ட சூரிய சந்திரர்களின் ஒளியை பூமிக்கு கிடைக்க விடாமல் தற்காலிகமாகத் தடைசெய்யும் கிரகணங்களை நம் ஜோதிடம் ஒரு சிறப்பு நிகழ்வாக எடுத்துக்கொள்கிறது.



சூரியனோ, சந்திரனோ இந்த சில நிமிட மறைப்புக்குப் பதிலாக சில மாதங்கள் மறைக்கப்பட்டாலும் பூமியில் உணவுச் சங்கிலி அடிபட்டு அனைத்து உயிர்களும் அழிந்துவிடும் என்பது விஞ்ஞான உண்மை.

எனவே, இப்படிப்பட்ட இன்றியமையாத சூரிய-சந்திர ஒளியை மறைத்துத் தடுத்து பூமிக்கு கிடைக்கவிடாமல் செய்வதனாலேயே கிரகணங்கள் ஒரு தோஷ நிகழ்வாக ஜோதிடத்தில் சொல்லப்படுகிறது.

ஜோதி வடிவான சூரிய சந்திரர்களையே சிவன்-சக்தி அம்மை, அப்பன் என வழிபடும் நமது மேலான இந்து மதத்தின் திருக்கோவில்கள் கிரகண நேரத்தில் இவர்கள் வலுவிழப்பதால்தான் நடை சாத்தப்பட்டு கிரகணம் முடிந்தபின் பரிகார பூஜைகள் செய்விக்கப்பட்டு மீண்டும் திறக்கப்படுகின்றன.

சில கோவில்களில் சந்திர கிரகணத்தன்று சக்தியாகிய அன்னையின் திருவுருவச் சிலை கிரகண சமயம் தர்ப்பைப் புற்களாலான போர்வையால் முழுக்க மூடிவைக்கப்பட்டு கிரகணம் முடிந்தபின் நீக்கப்படுவது உண்டு. இதன்மூலம் கிரகணத்தன்று ஏற்படும் சக்தி இழப்பை தோஷக் கதிர்களைத் தடுக்கும் சக்தி தர்ப்பைப் புல்லுக்கு உண்டு என்பதை நம் முன்னோர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதன் காரணமாகவே கிரகண நேரத்தில் நாம் நீரோ உணவோ அருந்தக்கூடாது எனவும், அப்படித் தவிர்க்க முடியாமல் தண்ணீர் குடிக்க நேர்ந்தால் அதில் தர்ப்பைப் புல்லைப் போட்டுக் குடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. சூரிய கிரகணம் ஆரம்பிக்கும் நேரமும் சந்திர கிரகணம் முடியும் நேரமும் முக்கியமானது என்பதால் இந்த நேரங்களில் புனித நீராடுவது நல்லது.

ஒரு பொதுவான வழிகாட்டுதலாக கடக லக்னம் மற்றும் கடக ராசி மற்றும் ஜாதகத்தில் சந்திர பகவானை சுபராகக் கொண்டவர்கள் கிரகண நேரத்தில் முக்கிய செய்கைகள் முடிவுகள் எதனையும் எடுக்காமல் இருப்பது நலம். அதைவிட இந்த நேரத்தில் சந்திர காயத்ரி போன்ற சந்திர துதிகளை தியானிப்பது அவர்களின் சந்திரபலத்தை தக்க வைக்கும்.

***கிரகண நேரத்தில் குழந்தை பிறப்பது நல்லதா?***

பூமியில் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் சந்திரனின் ஒளி தேவைப்படுவதைப்போல் இனி பிறக்கப் போகும் உயிரின் உடல் பலத்திற்கும் மன நலத்திற்கும் அது தேவை என்பதால்தான் கருவுற்றிருக்கும் பெண்கள் கிரகண நேரத்தில் வெளியே வர வேண்டாம் என ஜோதிடம் அக்கறையுடன் அறிவுறுத்துகிறது.

அதேபோல் கிரகண நேரத்தில் பிறக்கும் ஒரு குழந்தைக்கும் கிரகண தோஷம் எனப்படும் சந்திர வலுக்குறைவு ஏற்படுகிறது.

சந்திரன் என்பது ஒருவருக்கு தாயையும் மனோபலத்தையும் குறிக்கும் கிரகம் என்பதால் சந்திரன் ராகுவால் பாதிக்கப்படும் இதுபோன்ற நேரங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு தாய்வழி நன்மைகளும் ஆக்க சக்திக்கு தேவைப்படும் மனோபலமும் பாதிக்கப்படும் என்பது வேதஜோதிடத்தின் முடிவு.

அதேநேரத்தில் ஒரு குழந்தை பிறக்கும் நேரம் அதன் முந்தைய கர்ம வினைகளைப் பொறுத்தது என்பதோடு அது நம் கைகளிலும் இல்லை. எந்தவொரு ஜனனமும் பரம்பொருளின் விருப்பத்திற்கும் கட்டளைக்கும் உட்பட்டது.

இருப்பினும் என்னுடைய ஒரு சிறிய ஆலோசனையாக இந்த வாரம் அறுவைசிகிச்சை மூலம் குழந்தைப்பேறை எதிர்நோக்கி இருப்பவர்கள் சந்திர கிரகணம் முடிந்து அடுத்த நாள் வரைக்கும் அதாவது சந்திரன் இடப ராசிக்கு மாறும் புதன்கிழமை மதியம் வரை அறுவைசிகிச்சையை தள்ளிவைக்க முடிந்தால் நல்லது. ஆயினும், இது தாய் - சேய் இரண்டின் உயிர்ப்பிரச்சினை என்பதால் கடவுளுக்குச் சமமான மருத்துவரின் முடிவுக்குக் கட்டுப்படுவது நல்லது.

**சிவா பாஸ்கரராவ்**
***(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)***

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பு உத்தியோகத்தரை கடத்திச் சென்று கொள்ளை

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு, வீடொன்றில் அடைத்து வைக்கப்பட்டு 40,000 ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளதாக வெயாங்கொடை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி பணியிடத்திற்கு செல்வதற்காக புகையிரதத்தில் ஏறுவதற்காக தனது வீட்டிலிருந்து தனது மைத்துனருடன் வெயாங்கொடை புகையிரத நிலையத்திற்கு வந்ததாக இந்த பொலிஸ் சார்ஜன்ட் வெயாங்கொடை பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மருதானை புகையிரத நிலையத்திலிருந்து இறங்கி காமினி ஹோல் சந்தியை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது நீல நிற வாகனத்தில் வந்த சிலர் தனக்கு அருகில் நிறுத்தி காலி வீதியை நோக்கிச் செல்வதற்கு வழி கேட்டதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

அவர்கள் தன்னை வலுக்கட்டாயமாக வாகனத்தில் ஏற்றிச் சென்று ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றதாகவும், உணவு மற்றும் பானங்கள் கொடுத்ததாகவும் அவர் பொலிஸாரிடம் கூறினார்.

அன்று இரவை அந்த வீட்டிலேயே கழித்ததாகவும், காலையில் யாரோ ஒருவர் "தவறான நபரை அழைத்து வந்துள்ளீர்கள். உனக்கு சரியாக வேலை செய்யத் தெரியாது" என்று இன்னொருவரைக் கடிந்து கொண்டதாகவும் கூறினார்.

தன்னை கடத்தியவர்கள் தன்னிடம் இருந்த 40,000 ரூபா பணத்தை திருடிச் சென்றதாகவும், மீண்டும் கண்ணைக் கட்டி வாகனத்தில் ஏற்றி எங்கோ இறக்கிவிட்டு சென்றதாகவும், பின்னர், அந்தப் பகுதி பெலியத்த என்பதை அறிந்ததாக பாதிக்கப்பட்ட நபர் கூறியுள்ளார்.

நவம்பர் 2ஆம் திகதி மாலை தனது கணவர் காணாமல்போனதாக சார்ஜன்ட்டின் மனைவி முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருட்டுக் குற்றச்சாட்டில் 10 வயது மாணவர்கள் மீது மின்சாரம் பாய்ச்சி விசாரணையா?

### பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் அதிர்ச்சிக் குற்றச்சாட்டு

ஹொரண மில்லனிய பிரதேச பாடசாலையொன்றின் 5ஆம் ஆண்டு மாணவர்கள் மூவரை பாடசாலைக்கு வெளியே அழைத்துச் சென்று, மின்சாரம் பாய்ச்சி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் உதயகுமார அமரசிங்கவின் ஆலோசனையின்பேரில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிபரின் முறைப்பாட்டையடுத்த, பாடசாலைக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், அந்த மாணவர்களை வாகனத்தில் ஏற்றிச்சென்று, மின்சாரம் பாய்ச்சி விசாரணை செய்ததாக பெற்றோரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மூன்று மாணவர்களும் கைவிலங்கிடப்பட்டு, பாடசாலைக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த 2ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த இரண்டு குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மாணவர் ஒருவரின் உடலில் பல தீக்காயங்கள் காணப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

பெண் ஆசிரியை ஒருவரின் பணப்பை திருடப்பட்டதைத் தொடர்ந்து இந்த சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பணப்பை திருடப்பட்டதைத் தொடர்ந்து, பாடசாலையில் ஐந்தாம் ஆண்டு மாணவர்களான பன்னிரெண்டு மாணவர்களை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் சிலர், பாடசாலையின் நூலக அறையில் வைத்து சம்பவம் குறித்து கேட்டுத் தாக்கியுள்ளனர்.

மாணவர்கள் முழந்தாளிட வைக்கப்பட்டிருந்ததாக உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பாடசாலை அதிபரினால் மில்லனிய பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸ் ஜீப்பில் மூன்று உத்தியோகத்தர்கள் அங்கு வந்தனர். மூன்று மாணவர்களை வாகனத்தில் ஏற்றி பாடசாலைக்கு வெளியே அழைத்துச் சென்றதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தகவல்கள் வெளியாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.

## வீட்டார் மேல்வீட்டில் தூக்கம்: கீழ்வீட்டில் 3 இலட்சம் திருட்டு!

### யாழில் திருடர்கள் கைங்கரியம்

வீட்டார் மேல்வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த வேளை கீழ்வீட்டில் 3 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா திருட்டுப் போயுள்ளது.

யாழ்ப்பாணம், சுதுமலை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த வீடானது மேல்மாடி வீடாகும். அந்த வீட்டில் வசிப்போர் மேல்வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவேளை, கீழ்வீட்டின் கதவை நூதனமான முறையில் திறந்து உள்நுழைந்த திருடர்கள், கீழ்வீட்டில் இருந்த 3 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டார் தூக்கத்தால் எழுந்து கீழே வந்தபோது, வீட்டின் கதவு திறந்து இருப்பதைக் கண்ணுற்று வீட்டினுள் பணம் வைத்த இடத்தைப் பார்த்தபோது, அங்கு வைக்கப்பட்டிருந்த 3 இலட்சத்து 42 ஆயிரம் ரூபா பணம் காணாமல் போயிருந்தது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.





குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழக 25ஆவது ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்றைய தினம் (06) குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. குருநகர் சென். ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் சுதர்ஷனும் சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் சமூக பணிகளுக்காக சிலர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில், தையல் மற்றும் ஐஸிங் பயிற்சிகளை பூர்த்திசெய்த மாணவிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அத்தோடு, சர்வதேச ரீதியில் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில், பிரான்ஸ் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களான ஜூலி, கமில்ரன் மற்றும் கிறிஸ்ரின் உட்பட்ட பொதுமக்களும் மாணவிகளும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## மர்ஹூம் ஆர்.எம்.றினோஸ் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வு






(எம்.என்.எம்.அப்ராஸ்)

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் முகாமைத்துவ சபை உறுப்பினராக இருந்து கழகத்தின் வளர்ச்சியில் அரும்பணியாற்றி மறைந்த மர்ஹூம் ஆர்.எம்.றினோஸின் ஞாபகார்த்தமாக மியன்டாட் விளையாட்டுக் கழகத்தால் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படவிருக்கும் மர்ஹூம் ஆர்.எம்.றினோஸ் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அங்குரார்ப்பண அறிமுக நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாளிகைக்காடு அல்-ஹுஸையின் வித்தியாலயத்தில் கழகத்தின் உப தலைவர் யூ.எல்.பாஹிமின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கழகத்தின் ஸ்தாபக உறுப்பினரும், முகாமைத்துவ சபையின் உறுப்பினருமாகிய யூ.கே.நஜீமும் (ஆசிரியர்), விசேட விருந்தினர்களாக மர்ஹூம் றினோஸின் தந்தை ஏ.றஹீம் மற்றும் சகோதரர், ஆர்.எம்.றனீஸும் மற்றும் மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதில் மர்ஹூம் ஆர்.எம்.றினோஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம், கிரிக்கெட் சுற்றுத்தொடரின் உத்தியோகவூர்வ ரி-சேர்ட், கழகத்தின் புதிய சீருடை போன்றன அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

## இலங்கை உட்பட 12 அணிகள் 2024 T20 உலகக்கிண்ணத்தில் ஆட நேரடியாகத் தகுதி



ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒன்பதாவது இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தில் விளையாட 12 அணிகள் நேரடியாகத் தகுதிபெற்றுள்ளன. எட்டாவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதன் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மற்றும் நாளை மறுதினம் நடைபெறுவதுடன், இறுதிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இதன்பின்னர் ஒன்பதாவது இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவிருக்கிறது. இதில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. 55 போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. இந்நிலையில், 2024 உலகக்கிண்ணத்தில் விளையாட 12 அணிகள் நேரடியாகத் தகுதிபெற்றுள்ளன.

போட்டியை நடத்தும் அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. அத்தோடு 2022 இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தில் சுப்பர் 12 சுற்றில் இரு குழுக்களிலும் முதல் 4 இடங்களைப் பிடித்த அணிகள் நேரடியாக தகுதிபெற்றுள்ளன. அதன்படி, நியூசிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் நெதர்லாந்து அணிகள் நேரடியாகத் தகுதிபெற்றுள்ளன.

மேலும், ஐ.சி.சி. தரவரிசை அடிப்படையில் இரண்டு (பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான்) அணிகள் நேரடியாகத் தகுதிபெற்றுள்ளன. இதையடுத்து ஆபிரிக்க தகுதி சுற்றில் 2 அணிகள், அமெரிக்க தகுதி சுற்றில் 1 அணி, ஆசிய தகுதி சுற்றில் 2 அணிகள், கிழக்கு ஆசிய-பசிபிக் தகுதி சுற்றில் 1 அணி, ஐரோப்பிய தகுதி சுற்றில் 2 அணிகள் என மொத்தம் 8 அணிகளுடன் 20 அணிகள் 2024 இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தில் பங்கேற்கவுள்ளன.

## உலகக்கிண்ண அணிகள் அரசியலைவிட்டு உதைபந்தில் கவனம் செலுத்த வேண்டும் - பீபா வேண்டுகோள்




கட்டாரில் நடைபெறும் உலகக்கிண்ணத்துக்குத் தயாராகிவரும் 32 அணிகள் விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், ஒழுக்கம் குறித்த பாடங்களை வழங்குவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் பீபா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்த வாரம் அணிகள் அறிவிக்கப்படும்போது, பயிற்சியாளர்கள், வீரர்கள் மீது ஊடகங்கள் தீவிர கவனம் செலுத்துவதற்கு முன்னதாக பீபா தலைவர் கியானி இன்ஃபான்டினோ, பொதுச் செயலாளர் ஃபாத்மா சமுரா ஆகியோரால் உதைபந்தாட்டத்தை மையமாக எடுக்க அனுமதிக்க வேண்டும் என்று அணிகளை வலியுறுத்தும் கடிதம் அனுப்பப்பட்டது.

அமெரிக்காவை உள்ளடக்கிய குழுவில் நவம்பர் 21ஆம் திகதி நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் இங்கிலாந்தை விளையாடுவதற்கு முன்பு ஈரான் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எதிர்கொண்டது. ஈரானிய ரசிகர் குழுக்கள் பெண்களுக்கு எதிராக பாகுபாடு காட்டியதற்காக கூட்டமைப்பை இடைநீக்கம் செய்ய விரும்புகின்றன. மேலும் உக்ரைன் கால்பந்து அதிகாரிகள் மனித உரிமை மீறல்களுக்காகவும் ரஷ்ய இராணுவத்திற்கு ஆயுதங்களை வழங்கியதற்காகவும் ஈரானை உலகக்கிண்ணப் போட்டியிலிருந்து நீக்குமாறு பீபாவிடம் கேட்டுக்கொண்டனர்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டு நிதியை உருவாக்குவதற்கான அழைப்புகளை பல பயிற்சியாளர்கள் மற்றும் கூட்டமைப்புகள் ஆதரித்தன. டென்மார்க் அணி இறந்தவர்களுக்கு துக்கத்தின் அடையாளமாக கறுப்பு அணி சீருடையை எடுத்துவருகிறது.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## மதீனா மத்திய கல்லூரி றகர் அணிக்கு வெற்றி

(கண்டி நிருபர்)

மதீனா மத்திய கல்லூரி றகர் அணிக்கும் கொழும்பு சைனஜி றகர் அணிக்கும் இடையே இடம்பெற்ற சிநேகபூர்வ றகர் போட்டியில் மடவளை மதீனா றகர் அணி வெற்றிபெற்றது.

மதீனா மத்திய கல்லூரி மைதானத்தில் கடும் மழைக்கு மத்தியில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டியில், போட்டி ஆரம்பித்த முதல் நிமிடத்தில் மடவளை மதீனா அணி ஒரு ட்ரையை வைத்தது. அதனுடன் இலக்குத் தவறாது அடித்து கோலாக மாற்றப்பட்டது. இதனால் பள்ளிப்பட்டியல் 7-0 என ஆரம்பமாகியது.

போட்டி ஆரம்பம் முதல் மதீனா அணி போட்டியை தனது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தது. இடைவேளையின் போதும் அதே புள்ளியான 7-0 என்றே காணப்பட்டது. போட்டி முடிவடைய சற்று நேரத்திற்கு முன் மடவளை மதீனா அணி மற்றுமொறு ட்ரையை வைத்து. அதனை கோலாக மாற்ற முடியாமல் போனதால் புள்ளி 12-0 என்ற நிலையில் மதீனா அணி வெற்றிபெற்றது.

மதீனா அணிக்கு மொகமட் பைசல் பயிற்சிகளை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நட்சத்திர வீரர் ஜோகோவிச்சுக்கு அதிர்ச்சித் தோல்வி



உலகின் முன்னணி டென்னிஸ் வீரரும் 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவருமான நோவாக் ஜோகோவிச் 19 வயது இளம் வீரரிடம் அதிர்ச்சி தோல்வியடைந்துள்ளார். பரீஸ் மாஸ்டர்ஸ் 1000 ஏ.டி.பி. டென்னிஸ் தொடர் பிரான்ஸின் பரீஸ் நகரில் நடைபெற்றது. இந்தத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் செர்பியாவைச் சேர்ந்த டென்னிஸ் ஜாம்பவான் நோவாக் ஜோகோவிச்சை 19 வயதான டென்மார்க் இளம் வீரர் ஹோல்கர் ரூனே எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் ஜோகோவிச் எளிதில் வெற்றிபெற்று பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை, ரூனேவும் தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி தரவரிசையில் டொப் 10 வீரர்கள் பலரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். ஆட்டத்தின் முதல் செட்டை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார் ஜோகோவிச். சரி அடுத்த செட்டையும் எளிதாக வென்று ஜோகோவிச் பட்டத்தை தட்டிச் செல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இரண்டாவது செட்டில் சிறப்பாக விளையாடிய ரூனே 6-3 என வெற்றிபெற்று ஜோகோவிச்சுக்கு அதிர்ச்சி தந்தார்.

இதைத் தொடர்ந்து பட்டத்தை தீர்மானிக்கும் மூன்றாவது செட்டில் ஆட்டம் பறந்தது. இருவரும் 5-5 என்ற கேமில் இருந்த நிலையில், அடுத்த இரு கேம்களில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இளம் வீரர் ரூனே இறுதிச்செட்டை 7-5 என கைப்பற்றினார். இதன்மூலம் 3-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் ஜோகோவிச்சை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் இளம் வீரர் ரூனே. இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் முதல் முறையாக டொப்-10 பட்டியலில் முன்னேறியுள்ளார் ரூனே.

## ஒக்டோபர் மாதத்தின் சிறந்த வீரரான கோஹ்லி




சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் வழங்கப்பட்டு வரும் மாதத்தின் சிறந்த வீரருக்கான விருதில் கடந்த ஒக்டோபர் மாதத்தின் சிறந்த வீரருக்கான விருது இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோஹ்லிக்கு நேற்று வழங்கப்பட்டது.

நடப்பு இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியாவின் விராட் கோஹ்லி சிறப்பாக விளையாடி வருகிறார். இதுவரை விளையாடிய 5 ஆட்டங்களில் 3 அரைச் சதங்களுடன் 246 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இந்நிலையில், ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரருக்கான விருதை ஐ.சி.சி. வழங்கி வருகிறது. இந்த விருதுக்கு முதன்முறையாகப் பரிந்துரைக்கப்பட்ட கோஹ்லி, ஒக்டோபர் மாதத்துக்கான சிறந்த வீரராகத் தெரிவாகியுள்ளார். சிறந்த வீரரைத் தெரிவு செய்வதற்கான பரிந்துரையில் தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர், சிம்பாப்வேயின் சிகந்தர் ராஸா ஆகிய இருவரையும் வீழ்த்தி இந்த விருதை அவர் வென்றுள்ளார்.

இதேவேளை, மகளிர் பிரிவில் ஒக்டோபர் மாதத்தின் சிறந்த வீராங்கனையாக பாகிஸ்தானின் நிதா டர் தெரிவாகியுள்ளார்.

## விதியை மீறிய சிறுவனுக்கு 2.5 மில்லியன் அபராதம்

இந்திய - சிம்பாவே அணிகளுக்கு எதிரான போட்டியில் இந்திய அணி பீல்டிங் செய்துகொண்டிருந்தபோது மைதானத்தில் ரோகித் சர்மாவை நோக்கி ஓடிவந்த சிறுவனுக்கு இலங்கை மதிப்பின்படி ரூ. 2.5 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி பீல்டிங் செய்துகொண்டிருந்தபோது மைதானத்தில் ரோகித் சர்மாவை பார்க்க வேண்டும் என கண்ணீர் மல்க பாதுகாப்பு அதிகாரிகளை மீறி ஒரு சிறுவன் ஓடிவந்தார். இதனைப் பார்த்த பாதுகாவலர்கள் அந்தச் சிறுவனை தடுத்து நிறுத்தி இழுத்துச் சென்றனர். அப்பொழுது ரோகித் சர்மா, ரசிகர் சிறுவன் என்பதால் பாதுகாவலர்களிடம் பத்திரமாக அழைத்துச் செல்லுங்கள் என அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்நிலையில், விதிகளை மீறி மைதானத்திற்குள் ஓடிவந்த சிறுவனுக்கு இலங்கை மதிப்பில் ரூ. 2.5 மில்லியன் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



# கௌரவமான அரசியல் உரிமைக்கான தீர்வு கோரி 99ஆம் நாள் போராட்டம் திருகோணமலையில்






(கிண்ணியா நிருபர்)

100 நாட்கள் செயல்முனைவின் 99ஆவது நாள் மக்கள் குரல் திருகோணமலை மாவட்டத்தில் விலாங்குள கிராமத்தில் நேற்று (07) மக்களின் கௌரவமான அரசியல் உரிமைக்கான தீர்வு கோரி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊர்வலமாக பதாகைகளை ஏந்தியவாறு தங்களது கோரிக்கைகளை எழுப்பினர்.

இந்த 100 நாட்கள் செயல்முனைவின் 99ஆவது நாள் போராட்டத்தில் திருமலை பிரதேசத்திலுள்ள பிரதேச பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், பெண்கள் வலையமைப்பு உறுப்பினர்கள், சிறுகுழுக்களின் அங்கத்தவர்கள், ஆண்கள் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும். நாங்கள் நாட்டைத் துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப்பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். 13ஆவது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப்பரவலாக்கத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்றுகூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மதத் தலங்களின் புனிதத்தைக் கொச்சைப்படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களைத் திட்டமிட்டு சுவீகரிக்காதே எனப் பல கோரிக்கைகளை இதன்போது முன்வைத்து ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு நீதியுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டி முன்னெடுக்கப்படும் ஜனநாயகப் போராட்டங்களுக்குப் பெரும் சவாலாக இலங்கை அரச படைப் பிரிவினரும், இலங்கை படைப்பிரிவுகளின் புலனாய்வினர்களும் செயற்படுவது ஜனநாயகத்தைக் குழிதோண்டி புதைக்கும் செயலாகவே நாம் கருதுவதுடன், பாதிக்கப்பட்ட மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் உரிமைக்கான குரல்வளையை நசிக்கும் செயலாகவே நாம் இதனைக் கருதுவதுடன், இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுவேண்டும் எனும் ஜனநாயக ரீதியான மக்கள் குரலுக்கு ஜனாதிபதி உதவவேண்டுமெனவும் கோருகின்றோம் என இதன்போது மேலும் கருத்து தெரிவித்தனர்.

# கல்முனையில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு; உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடு




(சாய்ந்தமருது நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் நடமாடும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கல்முனை மாநகர சபை அறிவித்துள்ளது.

இது குறித்து மாநகர முதல்வர் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கல்முனை மாநகர பிரதேசங்களில் பிரதான வீதிகள், சந்தைகள், பஸார்களில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் மீண்டும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் வாகன விபத்துகள் இடம்பெறுவதுடன், பயணிகளும் வர்த்தகர்களும் நுகர்வோரும் பெரும் இடையூறுகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

அவ்வாறே மைதானங்கள், கடற்கரை, சிறுவர் பூங்காக்கள், பஸ் நிலையம் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலிகளின் நடமாட்டங்களினால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதுடன், குறித்த இடங்கள் கடுமையாக மாசுபடுத்தப்பட்டும் வருகின்றன. இதனால் சகிக்க முடியாத அளவுக்கு துர்நாற்றமும் வீசுகின்றது.


இவை தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளைத் தொடர்ந்து மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 48இன் கீழ் கல்முனை மாநகர சபையினால் மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இதனை நடைமுறைப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் இவ்வாறு மாடுகள் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் மாநகர சபையினால் தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. இனிவரும் காலங்களில் இதற்கு மேலதிகமாக நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்குடாவில் வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்டுவந்த சுள்ளான் திருட்டுக் கும்பல் தலைவர் உட்பட 6 பேர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் பல வீடுகளை உடைத்து நீண்ட காலமாக திருட்டில் ஈடுபட்டுவந்த சுள்ளான் திருட்டுக்கும்பல் தலைவர் உட்பட 6 பேரை நேற்று முன்தினம் (06) கைதுசெய்ததுடன் திருடப்பட்ட ரிவி, தண்ணீர் மோட்டர் 8, சைக்கிள் 2, தங்க ஆபரணங்கள் என்பவற்றை மீட்டுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசங்களிலுள்ள வீடுகளை உடைத்து அங்கிருந்த பெறுமதியான பொருட்கள், தங்க ஆபரணங்கள் திருட்டுப் போயுள்ள சம்பவங்கள் தொடர்பாக தொடர் விசாரணையில் ஈடுபட்டுவந்த கல்குடா பொலிஸார், சம்பவதினமான நேற்று முன்தினம் காலை வாழைச்சேனை மருதநகரில் வைத்து திருட்டுக் கும்பலின் தலைவர் சுள்ளான் உட்பட 6 பேரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் வாழைச்சேனை சந்திவெளி பிரதேசங்களில் இடம்பெற்ற வீடுகளை உடைத்து திருடப்பட்ட சம்பவங்களில் தொடர்புடையவர்கள் எனவும் இவர்கள் கல்குடா, கல்மடு, பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் எனவும் இவர்களிடமிருந்து திருடப்பட்ட ரிவி ஒன்று, தண்ணீர் இறைக்கும் மோட்டர் 8 சைக்கிள் 2, மேசை மின்விசிறி ஒன்று, கால் பவுண் கொண்ட சங்கிலி ஒன்று, கால்பவுண் கொண்ட தங்க மோதிரம் இரண்டு, மடிகணினி ஒன்று, டிஜிட்டல் தராசு ஒன்று என்பவற்றை மீட்டுள்ளதாகவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு மாகாண வரலாற்றில் முதல் தடவையாக மட்டக்களப்பில் பறங்கியர் கலாசார தின விழா





(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட பறங்கியர் கலாசார யூனியனும் இணைந்து கிழக்கு மாகாணத்தில் முதல்தடவையாக ஏற்பாடுசெய்த பறங்கியர் கலாசார தின விழா நேற்று முன்தினம் (06) திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்ஷன் தலைமையில் சின்ன உப்போடையிலுள்ள போர்த்துக்கீசர், பறங்கியர் அறக்கட்டளை சமூக மற்றும் கலாசார மையத்தின் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் கலந்து சிறப்பித்துள்ளார்.

அத்தோடு குறித்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தையர்கள், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும் பேராசிரியருமான சாமஸ் ராகல், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் எஸ்.நேசராஜா, மட்டக்களப்பு மாவட்ட செயலக கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன், பறங்கியர் கலாசார ஒன்றியத்தின் தலைவர் டெரிஸ்டொக்கர்ஸ், மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி வளர்மதி ராஜ் உள்ளிட்ட ஏனைய பிரதேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தர்கள் என மேலும் பலர் அதிதிகளாக கலந்து சிறப்பித்துள்ளனர்.

பறங்கியர் சமூகத்திற்கே உரித்தான பாரம்பரிய இசை இசைக்கப்பட்டு அதிதிகள் வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பறங்கியர் சமூகத்திற்கே உரித்தான பாரம்பரிய உணவு வகைகளின் கண்காட்சியை அதிதிகள் பார்வையிட்டதனைத் தொடர்ந்து பறங்கியர் சமூகத்தின் பாரம்பரிய கலாசார நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் விசேட விதமாக கப்பிறிஞ்சா மற்றும் லன்ஷஸ் ஆகிய நடனங்கள் அரங்கேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரைகள், பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்று, பறங்கியர் சமூகத்தின் கலை, கலாசார பண்பாட்டு அம்சங்களை வளர்ப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிரேஷ்ட கலைஞர்கள் இதன்போது பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளினால் நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!




***இலங்கையில இருந்து அவுஸ்திரேலியாவில பந்து விளையாடப்போன பொடியன் ஒருவன் பெண்ணோட தகாத சேட்டை புரிந்தவனாம் எண்டு அந்த நாட்டு பொலிஸார் புடிச்சி அடைச்சதாம் எலுவா..?***

***அடே வளிசல் நாய்களே உங்களுக்கெல்லாம் மானம் ரோசம் ஒழுக்கம் இல்லையாடா***

***அரசன் அவ்வழி குடிகளும் அவ்வழி எண்டது சரிதான் போல..!***

# கித்துள் ஸ்ரீ சன்னியாசி மலை சிவன் ஆலய மகா கும்பாபிஷேக குடமுழுக்கு





(மட்டக்களப்பு நிருபர்)

ஆலய தர்மகர்த்தாவும் ஆலய பூசகருமாகிய செல்லையா தம்பிராசாவினால் உருவாக்கம்பெற்ற கித்துள் ஸ்ரீ சன்னியாசி மலை அடிவாரத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமானுக்குரிய எண்ணைக்காப்பு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை ஸ்ரீ சன்னியாசி மலையில் அமைந்துள்ள எம்பெருமான் லிங்கேஸ்வரருக்கு சுபவேளையில் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் மகா கும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெற்றது. மகா கும்பாபிஷேக பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ சு.கு.சுப்பிரமணிய விநாயகமூர்த்தி குருக்கள் தலைமையில் குடமுழுக்கு பெருவிழா நடைபெற்றது.

குடமுழுக்கு பெருவிழாவில் பிரதான யாகசாலையில் பூசைகள் விசேட பூஜை நடைபெற்றதும் கும்பங்கள் எழுந்தருளப்பெற்று மேளதாள வாத்தியம் பக்தர்களின் சிவ சிவா அரோகரா கோஷத்துடன் கலச கும்பங்களுக்குரிய குடமுழுக்கு நடைபெற்றது.

அதன் பின்னர் ஸ்ரீ சன்னியாசி மலை சிவன் ஆலயத்தில் எழுந்தருளப்பட்டிருக்கும் மூலமூர்த்தி சிவலிங்கேஸ்வரருக்கு குடமுழுக்குக்கான பிரதான கும்பம் பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் ஆலய உள்வீதி வலம் வந்ததும் லிங்கேஸ்வரப் பெருமானுக்கு சிவ சிவா போற்றி சிவ சிவா போற்றி கோசத்துடன் குடமுழுக்கு இடம்பெற்று நிறைவுபெற்றது.

மகா கும்பாபிஷேகம் நிறைவு பெற்றதும் கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்துகொண்ட குருமார்கள் ஆலய அறங்காவலர் சபையினரால் கௌரவிக்கப்பட்டதுடன், மகா கும்பாபிஷேக பெரு விழாவில் கலந்துகொண்ட அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இடம்பெற்ற எண்ணெய்க்காப்பு மற்றும் மகா கும்பாபிஷேக குடமுழுக்குப் பெருவிழாவிற்கு பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், நடைபெற்ற பூசைகளிலும் கலந்துகொண்டிருந்தனர்.

# திருகோணமலை – ஹொரவபொத்தானை வீதியில் பட்டா லொறியுடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்து

**ஒருவர் காயம்**



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ஹொரவபொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மஹதிவுல்வெவ குளத்திற்கு அருகே சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான உணவகத்தில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பயணித்துக்கொண்டிருந்தபோது டிமோ பட்டா லொறியுடன் மோட்டார்சைக்கிள் மோதியதாகவும் தெரிய வருகின்றது.

இவ்விபத்தின்போது மஹதிவுல்வெவ - திம்பிரிவெவ பகுதியைச் சேர்ந்த ஏ.கே.யூ.பியங்கர (34 வயது) படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ்விபத்துடன் தொடர்புடைய டிமோ பட்டா லொறியின் சாரதி தப்பிச் சென்றுள்ளதாகவும் விபத்தில் காயமடைந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடியில் இருட்டு வீதிகள்

**மின் விளக்குகளை பொருத்தித் தர கோரிக்கை**



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட நாவலடி, அறபா நகர், பாலை நகர் போன்ற கிராமங்களுக்குச் செல்லும் பல வீதிகள் இருளடைந்த நிலையில் காணப்படுகின்றன.

வெளிப் பிரதேசங்களுக்குச் சென்று தொழில்களில் ஈடுபட்டுவிட்டு இரவுநேரங்களில் தங்களது வீடுகளுக்குச் செல்லும்போது வீதிகள் இருளடைந்து காணப்படுகின்றன. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றோம் என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கால்நடைகள், விஷ ஜந்துக்கள் அதிகம் நடமாடும் இடமாகவும் அவ்வீதிகள் காணப்படுகின்றன.

எனவே, பயணிகளின் நலன்கருதி குறித்த வீதிகளுக்கு ஓட்டமாவடி பிரதேச சபையினர் மின் விளக்குகளை பொருத்தி பொதுமக்கள் அசௌகரியங்களின்றி பயணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# ரூ. 29 இலட்சம் பெறுமதியான மருந்துப்பொருட்கள் பனங்காடு பிரதேச வைத்தியசாலைக்கு அன்பளிப்பு





(ஆலையடிவேம்பு நிருபர்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் பனங்காடு பிரதேச வைத்தியசாலைக்கு தேவையான 29 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துப்பொருட்கள், அத்தியாவசிய உணவுப்பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தினரால் நேற்று (07) வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் யு.எம்.எல்.சகீல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைப்பின் சார்பில் கலந்துகொண்ட பிரபல வர்த்தகர் சி.பரநாதன் கலந்துகொண்டு மருந்துப்பொருட்களை கையளித்தார்.

நிகழ்வில் வைத்தியரும் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயலாளருமான சித்ரா தேவராஜன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளரும் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் உதவிச் செயலாளருமான வி.பபாகரன், பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் குணாளினி சிவராஜ், ஆசிரியரும் சமூக ஆர்வலருமான எஸ்.புண்ணியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர், வைத்தியர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்விற்கு வருகை தந்த அதிதிகளை வைத்தியசாலை அபிவிருத்திக் குழு வைத்திய குழாமினர் இணைந்து வரவேற்றனர்.

நன்றியுரை வழங்கிய வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவின் செயலாளருமான சித்ரா தேவராஜன் குறித்த மருந்துப்பொருட்களைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிக்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி ஒவ்வொருவருக்கும் நன்றி கூறினார்.

இதன் பின்னர் உத்தியோகபூர்வமான முறையில் மருந்துப்பொருட்கள் பிரபல வர்த்தகர் சி.பரநாதனினால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.




## 21இல் ஆட்டம் ஆரம்பம்

# சவால்களை தவிடுபொடியாக்கி உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியை நடத்தும் கட்டார்

- தொடர்ந்து 28 நாட்களில் 8 மைதானங்களில் 64 போட்டிகள்
- இறுதிப் போட்டி டிச. 18இல் 80,000 ரசிகர்களுடன் லூசைலில்

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கான பிரம்மாண்ட ஏற்பாடுகளை கட்டார் அரசு மேற்கொண்டுள்ளது.

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியை கடந்த முறை நடத்திய ரஷ்யா, உலகின் மிகப் பரந்த பெரிய நாடு என்றால் அதற்கு நேர்மாறாக இம்முறை வெறும் 180 மீற்றர் சுற்றளவில் 23 இலட்சம் மக்களே வசிக்கும் கட்டார் நடத்துகிறது.

உலகக்கிண்ணத்துக்கு ஒருமுறை கூட தகுதி பெறாத நாடு, 45 டிகிரி செல்சியஸ் வெப்பம் நிலவும் நாடு போன்ற சவால்களைத் தாண்டி கடுமையாகப் போராடி இந்த அரிய வாய்ப்பைப் பெற்றுள்ள கட்டார், பணத்தை தண்ணீராக வாரி இறைத்து உலகமே வியந்து பறக்கும் அளவிற்கு பிரம்மாண்டமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டிகளை நடத்த மொத்தம் 8 அரங்குகளை கட்டார் தயார் செய்துள்ளது. அவற்றில் ஒன்று பழைய மைதானம். அது முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய 7 மைதானங்களும் இலட்சக்கணக்கான வெளிநாட்டுத் தொழிலாளர்களைக்கொண்டு




அல்லும் பகலும் வேலை செய்து புதிதாக கட்டப்பட்டவை.

ஸ்டேடியம் 974, எஜுகேஷன் சிட்டி ஸ்டேடியம், அல்-துமாமா ஸ்டேடியம், அல்-ஜனுப் ஸ்டேடியம், அகமது பின் அலி ஸ்டேடியம் ஆகிய 5 மைதானங்களிலும் 40,000 பார்வையாளர்கள் அமர்ந்து போட்டியை ரசிக்க முடியும்.

அதேபோன்று கலீபா சர்வதேச அரங்கில் 45,416 ரசிகர்களும், அல்பேத் ஸ்டேடியத்தில் 60,000 ரசிகர்களும் நேரடியாக கால்பந்தாட்டங்களைப் பார்த்து ரசிக்க இயலும்.

அதிகபட்சமாக 80,000 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய லூசைல் ஸ்டேடியத்தில்தான் உலகக்கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி நடைபெறும். நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் 28 நாட்கள் நடைபெறுகிறது. 32 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் மொத்தம் 64 போட்டிகள் நடைபெறுகின்றன. இறுதிப் போட்டி டிசம்பர் 18ஆம் திகதி லூசைல் ஸ்டேடியத்தில் அரங்கேறும்.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியாவுடன் மல்லுக்கட்டி உலகக்கிண்ணப் போட்டியை நடத்தும் உரிமையை கைப்பற்றியதுமே தொடங்கிவிட்ட சர்ச்சைகளைத் தாண்டி தொடரை வெற்றிகரமாக நடத்திக்காட்ட கட்டார் முனைப்பு காட்டி வருகிறது. அனைத்து விளையாட்டு அரங்கங்களும் தலைநகர் தோஹாவிலிருந்து 50கிலோமீற்றர் தொலைவில் ஒன்றுக்கொன்று ஒரு மணிநேர பயணத்தில் அமைந்துள்ளன.

போட்டியில் கலந்துகொள்ளும் அணிகள் ரசிகர்களின் பயண வசதிக்கேற்ப அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. சுமார் 15 இலட்சம் ரசிகர்கள் நேரில் கண்டு ரசிப்பார்கள் என போட்டி ஏற்பட்டாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். அங்கு சுற்றுலாப் பயணிகளுக்காக சுமார் 1.75 ஆயிரம் ஹோட்டல் அறைகளே இருப்பதால் மிதக்கும் ஹோட்டல்களை தயார்செய்ய ஒரு கப்பல் நிறுவனத்துடன் கட்டார் அரசு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. 180 கி.மீற்றருக்குள்தான் அனைத்து மைதானங்களும் இருப்பதால் ரசிகர்கள் எளிதாக சென்று வரலாம். இந்தவகையில் கட்டாரில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி ரசிகர்களுக்கு சற்று வித்தியாசமான அனுபவத்தை தரும் என்பதில் ஐயமில்லை.

## உலக செய்திகள்

### 620 அடி ஆழ சுரங்கத்துள் 9 நாட்கள்

## கோப்பித் தூளை சாப்பிட்டு உயிர் தப்பிய ஊழியர்கள்




தென் கொரியாவில் 620 அடி ஆழ சுரங்கத்தில் சிக்கிய தொழிலாளர்கள் 2 பேர், கோப்பித் தூளை 9 நாட்களாக சாப்பிட்டு உயிர் பிழைத்துள்ளனர்.

தென் கொரியாவின் போங்க்வா நகரிலுள்ள துத்தநாக சுரங்கத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்ட ஏராளமான தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 620 அடிக்கு கீழ் இந்த விபத்து நடந்தது. இருப்பினும், இடிபாடுகளின் இடையே கிடைத்த இடைவெளியில் பதுங்கி, சில ஊழியர்கள் உயிர் தப்பினர்.

அவர்களை மீட்பதற்கான மீட்புப் பணி தொடர்ந்து நடந்துவந்தது. இதில், 9 நாட்களுக்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை 2 பேர் மீட்கப்பட்டனர். இவர்கள் 620 அடி ஆழத்தில் செங்குத்தான பாறைகளின் நடுவே சிக்கியிருந்தனர். கடந்த 9 நாட்களாக இவர்கள், தாங்கள் வைத்திருந்த உடனடி கோப்பித் தூளை சாப்பிட்டும், தண்ணீரை சொட்டு சொட்டாகக் குடித்தும் உயிர் வாழ்ந்துள்ளனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 2 பேரின் உடல்நிலையும் தற்போது சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். "இவர்கள் உயிர் பிழைத்தது பெரிய அதிசயம்" என்று தென்கொரிய ஜனாதிபதி யான் சுக் இயோல் தெரிவித்தார்.

## ஒரு நிமிடத்தில் 1,140முறை கைத்தட்டி கின்னஸ் சாதனை



அமெரிக்காவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், ஒரு நிமிடத்தில் 1,140 முறை கைத்தட்டி கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

டேவன்போர்ட் பகுதியைச் சேர்ந்த டால்டன் மேயர் என்ற 20 வயதான இளைஞர், ஒரு விநாடிக்கு 19 முறை என ஒரு நிமிடத்தில் 1,140 முறை கைத்தட்டி சாதனை படைத்துள்ளார்.

ஏற்கனவே படைக்கப்பட்ட சாதனையை 37 கைத்தட்டல்கள் வித்தியாசத்தில் டால்டன் மேயர் முறியடித்த நிலையில், இதற்காக அவர் பயிற்சிகூட செய்ததில்லை என்றதுதான் வியப்புக்குரிய விடயமாகும்.

### எகிப்து 'கோப் 27' உச்சிமாநாடு

# காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு இழப்பீடு

### 194 நாடுகள் ஒப்புதல்; முக்கிய தீர்மானம் நிறைவேற்றம்




காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு நிதி/இழப்பீடு வழங்க கோப் குழுவில் இடம்பெற்றுள்ள 194 நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்ற பணித்திட்டப் பேரவை (UNFCCC) 1992இல் உருவாக்கப்பட்டது. இந்தப் பணித்திட்டத்தில் கையெழுத்திட்டுள்ள 197 நாடுகளும், 1995 முதல் ஆண்டுதோறும் Conference of Parties (சுருக்கமாக COP; 'Parties' என்பது நாடுகள்) என்ற மாநாட்டைக் கூட்டி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விவாதித்து வருகின்றன. அந்தவகையில், 27ஆவது ஆண்டுக் கூட்டமான 'COP 27', நேற்றுமுன்தினம் (06ஆம் திகதி) ஆரம்பமாகிய நிலையில், எதிர்வரும் 18ஆம் திகதிவரை எகிப்திலுள்ள ஷார்ம் எல்-ஷேக்கில் நடைபெற்று வருகிறது.

இதன் முதல் கூட்டத்தில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு சேத நிதி/இழப்பீடு வழங்க கோப் குழுவில் இடம்பெற்றுள்ள 193 நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்ற குழுத் தலைவர் சைமன் ஸ்டீல் தெரிவிக்கையில்,

"இது முன்னேற்றத்தைக் குறிக்கிறது. நாடுகள் இந்த முறை ஆக்கப்பூர்வமான அணுகுமுறையை எடுத்துள்ளன" - என்றார்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட வளரும் நாடுகள், தனி தீவுகள், ஆபிரிக்க நாடுகள், பழங்குடி சமூகங்கள் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு வளர்ந்த நாடுகளிலிருந்து இழப்பீடு கேட்டிருந்தனர். இந்நிலையில், கோப் குழுவில் எடுக்கப்பட்ட இந்த முடிவு வரவேற்பைப் பெற்றுள்ளது.

காலநிலை மாற்றத்தினால் உலக நாடுகள் பெரும் பாதிப்பை சந்தித்து வருகின்றன. பெரும் வெள்ளம், புயல், அதீத மழையினால் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளும், பொருளாதார இழப்புகளும் ஏற்படுகின்றன. மேலும் ஆர்டிக், அண்டார்டிக்கா கண்டங்களிலுள்ள பனிப்பாறைகள் உருகி வருவதால் உலக நாடுகள் பெரும் அபாயத்தை எதிர்கொள்ளவிருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில், காலநிலை மாற்றத்தை சமாளிக்கவும், அதன் தீவிரத்தைக் குறைக்கவும் உலக நாடுகள் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

## இனப்பெருக்க முறையை ஆராய விண்வெளிக்குச் செல்லும் குரங்குகள்



சீன விண்வெளி நிலையத்திற்கு குரங்குகளை அனுப்பி அதன் வளர்ச்சி மற்றும் இனப்பெருக்க முறையை ஆராய்ச்சி செய்ய அந்த நாடு திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பூஜ்ஜிய புவியீர்ப்புச் சூழலில் குரங்கின் வளர்ச்சி மற்றும் இனப்பெருக்க முறையைத் தெரிந்துகொள்ள இந்த ஆராய்ச்சி உதவும் என்றும், விலங்குகளைக்கொண்டு ஆராய்ச்சி மேற்கொள்வதன் மூலம் மனிதர்கள் விண்வெளியில் வாழத் தேவையான கூறுகளைத் தெரிந்துகொள்ள முடியுமென்றும் சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

உயிர்களின் இனப்பெருக்க ஆய்வுக்காக தற்போதுவரை மீன்கள், நத்தைகள் போன்ற உயிரினங்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதையடுத்து தற்போது குரங்குகளை அனுப்ப சீன விஞ்ஞானிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## தான்சானியா விமானம் விபத்து: 19 பேர் உயிரிழப்பு: 26 பேர் மீட்பு





தான்சானியாவின் சிறிய ரக பயணிகள் விமானமொன்று விக்டோரியா ஏரியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 19 பேர் உயிரிழந்துள்ளதுடன், 26 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான தான்சானியாவின் டாரஸ் சலாம் நகரிலிருந்து புகோபா நகரை நோக்கி 43 பயணிகள் மற்றும் விமான ஊழியர்களுடன் நேற்றுமுன்தினம் காலை புறப்பட்ட உள்நாட்டு விமானம், சுமார் 328 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபோது, திடீரென விக்டோரியா ஏரியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தின் பெரும்பகுதி தண்ணீரில் மூழ்கியது.

இதில் விமானத்தில் பயணித்த 19 பேர் உயிரிழந்தனர். விமானநிலையத்தை நெருங்கும்போது மழை பெய்ததால், மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

விபத்து குறித்து தகவலறிந்துவந்த மீட்புப்படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 26 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## மீனவர் கைதைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 15 மீனவர்களை விடுவிக்கக் கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 15 மீனவர்களை இலங்கை கடற்படை நேற்றுமுன்தினம் கைதுசெய்தது. இந்த கைது நடவடிக்கையை கண்டித்து இராமேஸ்வரம் துறைமுகத்தில் நடந்த மீனவர் சங்கக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட மீனவர்களையும், விசைப்படகுகளையும் விடுவிக்க ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மீனவர்கள் நேற்றுமுதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

இதனால் 800இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையோரம் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. மீனவர்கள் கைதைக் கண்டித்து தங்கச்சிமடம் மீனவர்கள் இன்றுமுதல் ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு செய்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7